மார்ச் - ஏப்ரல் 2024

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## பஸ்கா மற்றும் நினைவுகூருதலைப் பற்றிய பிரதிபலிப்புகள்


- யூத பண்டிகைகளில் இருந்து பாடங்கள்
- வெளியேறுதல் முதல் நினைவுகூருதல் வரை
- துரிதமாக உணவு உண்ணுதல் மற்றும் விரைவாக வெளியேறுதல்
- இஸ்ரயேலின் பஸ்காக் கொண்டாட்டங்கள்
- நிசான் 10
- இயேசுவின் உயிர்த்தெழுதல்
- கிறிஸ்துவில் உள்ள நன்மைகள்

# பஸ்கா மற்றும் நினைவுகூருதலைப் பற்றிய பிரதிபலிப்புகள்

## ஆதியிலே



இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த நாளாக பெரிய வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகைகளை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கொண்டாடும் அதே வேளையில், யூதர்களின் பஸ்கா பண்டிகை அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வரலாற்று நேரம் என்பதை வேத மாணவர்கள் அறிந்திருக்கிறார்கள். மிக முக்கியமான இந்த நிகழ்வுகளின் வேத ஆதாரங்களை இந்த இதழ் கருத்தில் கொள்கிறது.

"**யூத பண்டிகைகளில் இருந்து பாடங்கள்**" என்ற கட்டுரை, நியாயப்பிரமாணத்தின்படி இஸ்ரயேலின் பண்டிகைகளின் வரிசையை விவரிக்கிறது. லேவியராகமம் 23, தேவன் நியமித்தபடி நேரங்களையும் காலங்களையும் கொண்டாடுவதற்கான வழி முறைகளைக் கொண்டுள்ளது. இந்த பரிசுத்தமான நாட்கள் ஒவ்வொன்றும் யூத தேசத்திற்கு ஒரு சிறப்பு அர்த்தத்தை கொடுத்து, இன்றைய கிறிஸ்தவர்களுக்கு படிப்பினைகளை வழங்குகிறது.

முதல் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம், முதலில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களையும், இறுதியில் இஸ்ரயேல் முழுவதையும் எவ்வாறு மரணத்திலிருந்து விடுவித்தது என்பதை "**வெளியேறுதல் முதல் நினைவுகூருதல் வரை**" என்ற பாடம் ஆராய்கிறது. அடுத்தடுத்த பஸ்காக்கள் அந்த முதல் பஸ்காவின் வருடாந்திர நினைவுகூருதலாக இருந்தது. துரிதமாக உணவு உண்ணுதல் மற்றும் விரைவாக வெளியேறுதல் ஆகியவை இஸ்ரயேலின் பஸ்கா கொண்டாட்டத்திற்கான காலக்கெடுவையும், அது நமது நினைவுகூருதலை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் ஆராய்கிறது.

"**இஸ்ரயேலின் பஸ்கா அனுசரிப்புகள்** ". பஸ்கா மற்றும் அதன் அனுசரிப்புகளைப் பற்றி பழைய ஏற்பாட்டில் ஆறு இடங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது, மற்ற இடங்களில் சுருக்கமாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் மரணத்தை வருடாந்தரம் அனுசரிக்கும் கிறிஸ்தவர்கள், சரியான முறையில் ஆயத்தமாக அனுசரிப்பதற்கு, இந்த ஆறும் மிகவும் பொருத்தமாக உதவுகிறது.

**நிசான் 10**, ஜனங்கள் இயேசுவை "இஸ்ரயேலின் இராஜா" என்று போற்றிய நாள். ஆனால் நிசான் 10 ஆம் தேதியின் அர்த்தத்தை இயேசு அறிந்திருந்தார், அது பஸ்காவுடன் தொடர்புடையது - நான்கு நாட்களுக்குப் பிறகு பஸ்கா ஆட்டுக்குட்டி கொள்ளப்படும். அவர் வேதனையை அனுபவிக்க மனதளவில் தயார் செய்ததால், பாராட்டுக்களின் இனிமை குறுகிய காலமே இருந்தது.

**இயேசுவின் உயிர்த்தெழுதல்.** இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி அறிந்த முதல் மனிதர்கள் கல்லறையைக் காத்தவர்கள். ஆனால் இயேசுவைப் பார்த்த முதல் சீஷர் யார் ? இந்தக் கட்டுரை, இயேசு உயிர்த்தெழுந்த ஞாயிறு காலையைப் பற்றிய விவரங்களை நான்கு சுவிசேஷ பதிவுகளோடு ஒப்பிடுகிறது.

நம்முடைய இறுதிக் கட்டுரை, "**கிறிஸ்துவில் உள்ள நன்மைகள்**", இயேசுவைப் பின்பற்றுவதற்கான நம்முடைய முடிவின் தாக்கத்தையும், அது நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திற்கும் எவ்வாறு பயனளிக்கிறது என்பதையும் கருத்தில் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறது. ஒவ்வொரு வருடாந்தர அனுசரிப்பின் போதும், தேவதூதர்கள் கூட "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்" (வெளிப்படுத்துதல் 5:12)என்ற வார்த்தைகளை உரக்கச் சொல்லும் அளவுக்கு ஒரு சிறப்பானவரை கனப்படுத்தும் பாக்கியத்தை நாம் உணர்கிறோம்.

இந்த இதழில் முன்வைக்கப்படும் கருத்துகள் கிறிஸ்தவர்களின் வாழ்வில் மிக முக்கியமாக அனுசரிக்கப்படும் இந்த அனுசரிப்பு, அனைவருக்கும் ஒரு நன்மையாக இருக்கட்டும்.

**மார்ச் / ஏப்ரல் 2024, தொகுப்பு 106, எண் 2**


**யூத பண்டிகைகளில் இருந்து பாடங்கள்** 2
லேவியராகமம்

**வெளியேறுதல் முதல் நினைவுகூருதல் வரை** 6
தேவ ஆட்டுக்குட்டி

**துரிதமாக உணவு உண்ணுதல் மற்றும் விரைவாக வெளியேறுதல்** 13
கடைசி இரவு

**இஸ்ரயேலின் பஸ்காக் கொண்டாட்டங்கள்** 18
ஆறு சந்தர்ப்பங்கள்

**நிசான் 10** 25
ஆட்டுக்குட்டியை தெரிந்துகொள்ளுதல்

**இயேசுவின் உயிர்த்தெழுதல்** 32
மதிறக்கப்பட்ட கல்லறை

**கிறிஸ்துவில் உள்ள நன்மைகள்** 36
தகுதியுள்ள ஆட்டுக்குட்டி

**பின் அட்டை** 41
ஒரு உவமை

லேவியராகமம் 23

# யூதர்களின் பண்டிகைகளில் இருந்து பாடங்கள்



Ray Charlton

"நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் - சபைகூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன - (லேவியராகமம் 23:2)."

மோசேயின் மூலமாக கடவுள் நியமித்த, பரிசுத்த நாட்கள், நேரங்கள், காலங்கள் ஆகியவை லேவியராகமம் இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பரிசுத்த நாட்கள் ஒவ்வொன்றும் யூத தேசத்திற்கு ஒரு சிறப்பு அர்த்தத்தைக் கொண்டிருந்தன. மேலும் இன்று கிறிஸ்தவர்களுக்கு பாடங்களையும் வழங்குகிறது.

## ஓய்வு நாள்

"ஆறுநாளும் வேலை செய்யவேண்டும், ஏழாம் நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம், அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக. "(லேவியராகமம் 23:3)

இஸ்ரயேலர்களுக்கு தங்கள் குடும்பங்களுக்காக ஆறு நாட்கள் இருந்தது, ஏழாவது நாள் சர்வவல்லவரை வணங்குவதற்கு ஒதுக்கப்பட்டது. மற்ற பண்டிகைகள் பரிசுத்த ஸ்தலத்தில், ஆசரிப்புக் கூடாரத்தில் அல்லது ஆலயத்தில் அனுசரிக்கப்பட்டது சுவாரஸ்யமானது. ஓய்வு நாள், ஓய்வின் நாளாக, அந்த நாளில் அவர்கள் எங்கிருந்தாலும், அதாவது வீடுகளிலோ அல்லது பயணத்தின்போதும் கூட அனுசரிக்கப்பட வேண்டியதாக இருந்தது.

## கர்த்தருடைய பஸ்கா

"முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையும்," (லேவியராகமம் 23:5) முதலாவது சங்கார தூதன் எப்படி இஸ்ரயேலின் தலைச்சன் பிள்ளைகளை கடந்து சென்றார் என்பதையும், அதேநேரத்தில் எகிப்தியர்களின் மனிதர்கள் முதல் மிருக ஜீவன்களின் தலைச்சன்களை எப்படி சங்கரித்தார் என்பதை நினைப்பூட்டுகிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்ததும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு அவர்களை யெகோவா தேவன் வழிநடத்தியதை நினைவுகூரும்படி மாற்றப்பட்டது. ஆட்டுக்குட்டி பதினான்காம் தேதி மாலை 3:00 மணிக்கு கொல்லப்பட்டது.

## புளிப்பில்லாத அப்பப்பண்டிகை.

"அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப்பண்டிகையுமாய் இருக்கும், ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்கவேண்டும். முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல், அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிடவேண்டும், ஏழாம் நாள் பரிசுத்தமான சபைகூடுதல், அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல் என்றார்."(லேவியராகமம் 23:6-8)

பதினைந்தாவது நாள், யூதர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய நாள், இது ஒரு மகிழ்ச்சியான சந்தர்ப்பமாக இருந்தது, இது இயேசுவின் காலம் வரை எதிர்காலத்தை நினைவுகூரப்பட்டது. ஆட்டுக்குட்டி 15வது நாளில் புசிக்கப்பட்டது. முதலாம் நாள் மற்றும் ஏழாம் நாள், அவர்கள் கடினமான வேலைகளைச் செய்யக்கூடாது என்பது சுவாரஸ்யமானது. அவர்கள் விவசாயம், உற்பத்தி அல்லது உபகரணங்களை பழுதுபார்க்கும் பணிகளில் வேலை செய்யக்கூடாது. அவர்கள் ஓய்வு நாளில் அப்பம் சுடாமல், இறைச்சியை பொறிக்காமலும், பயணம் செய்யாமலும் இருக்கவேண்டும்.

## வாரங்களின் பண்டிகை





"நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டை கொண்டுவரும் ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறைவேறினபின்பு, ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்தக்கடவீர்கள்."(லேவியராகமம்23:15-16)

இந்த பண்டிகையைப் பற்றி யாத்திராகமத்தில் விளக்கப்பட்டுள்ளது. "கோதுமை அறுப்பின் முதற்பலனைச் செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டிகையையும், வருஷமுடிவிலே சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக. " (யாத்திராகமம் 34:22) பஸ்காவின் போது வாற்கோதுமை அறுவடையின் நேரமாக இருந்தது, அதே நேரத்தில் வாரங்களின் பண்டிகை கோதுமை அறுவடையின் தொடக்கத்தில் இருந்தது. இந்த நேரத்தில் பூமியின் கனிகள், தானியங்கள், திராட்சரசம் மற்றும் எண்ணெய் மற்றும் அனைத்தும் சேகரிக்கப்படுவதால், இது சேர்ப்பின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. இது பழைய வருடத்தின் முடிவிலும், புதிய ஆண்டின் தொடக்கத்திலும் நடந்தது. (யாத்திராகமம் 23:16) புளிப்பில்லா அப்பப்பண்டிகைக்கு ஒத்த கட்டளை கொடுக்கப்பட்டது. "அந்த நாள் உங்களுக்குச் சபை கூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும், அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை"(லேவியராகமம்23:21)

ஒரு சுவாரசியமான விஷயம் 17 வது வசனத்தில் வெளிப்படுகிறது. "நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம் பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவந்து,"(லேவியராகமம் 23:17) யெகோவா தேவனுக்கு செலுத்தப்படும் காணிக்கைகள் அனைத்தும் பழுதற்ற ஆண்களாகவோ அல்லது அறுவடையின் முதல் பலன்களாகவோ இருக்கவேண்டும். பஸ்காவின் அப்பம் புளிப்பில்லாதது போல புளிப்பில்லாத அப்பமும் நொதிக்காமல் இருக்கவேண்டும். இருப்பினும், இந்த பலிக்காக அவர்கள் கோதுமை மற்றும் புளிப்புடன் செய்யப்பட்ட அப்பங்களை கொண்டு வர அனுமதிக்கப்பட்டனர்.

### எக்காளங்களின் பண்டிகைகள்

"நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால் - உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக, அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் என்று சொல் என்றார்." (லேவியராகமம்23:24-25)

இது சிவில் ஆண்டின் தொடக்கமான ஏழாவது மாதமான திஷ்ரியின் (செப்டம்பர், அக்டோபர்) முதல் நாளில் நடந்தது. எக்காளம் ஊதுவது - இஸ்ரயேல் புத்திரரை ஒரு பரிசுத்தமான சபைக்கூடுகைக்கு அழைத்தது. இந்த பத்தாம் தேதி பாவநிவாரண நாள் அனுசரிக்க வேண்டியதாக இருந்தது. எனவே இந்த பத்து நாள் அளவும், சுயபரிசோதனைக்காகவும் மனந்திரும்புதலுக்காகவும் கால அவகாசம் கொடுக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

### பாவநிவாரண நாள்

எக்காளங்கள் முழங்கப்பட்டு பத்து நாட்களுக்குப் பிறகு கடவுள் மீண்டும் மோசேயிடம் பேசினார். "அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக, அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள். அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும்

பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம். அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்." (லேவியராகமம் 23:27-29) இதில் யூதர்கள் மட்டுமல்ல, அவர்களிடையே தங்கியிருந்த அந்நியரும் அடங்குவர்.

இந்த நாளின் விதிகள் மற்றும் தண்டனைகள் கடுமையாக இருந்தன, அந்த நாளில் எந்த வேலையும் செய்யப்படக்கூடாது, ஏனெனில் அதற்கான தண்டனை மரணம். அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் அது அவர்களின் தலைமுறை முழுவதும் நிரந்தரமான சட்டமாக இருக்க வேண்டும். முன்னதாகவே வேலியராகமத்தில் இந்த நாளின் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. "கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும் பொருட்டு, உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும். "(லேவியராகமம் 16:30) முந்தைய ஆண்டில் ஜனங்களின் பாவங்களுக்கு நிவாரணம் செய்ய பிரதான ஆசாரியன் செய்ய வேண்டிய நடைமுறைகளை அமைக்க பதினாறாம் அதிகாரம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

### கூடாரங்களின் பண்டிகை

பாவநிவாரண நாளின் பலிகளுக்கு ஐந்து நாட்களுக்கு பின், மோசேயை ஜனங்களுக்குச் சொல்லும்படி யெகோவா தேவன் கட்டளையிட்ட காரியங்கள் - "நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால் - அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதி முதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசாரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக. முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள், அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. ஏழு நாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள், எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்,அதிலே கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள், அது ஆசரிக்கப்படும் நாள், அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம்." (லேவியராகமம் 23:34-36)

கூடார பண்டிகை கர்த்தருக்கென்று ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டது. பூமியின் பலன்களுக்கு நன்றி செலுத்தும் வகையிலும், இப்போது அனைவரும் கூடி முக்கியமாக இஸ்ரயேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் கூடாரங்களிலும் தங்கியிருந்ததை நினைவுகூரும்படியாகவும் இது வடிவமைக்கப்பட்டிருந்தது. ஏழு நாட்கள் தொடர்ந்து காணிக்கைகள் செலுத்தப்படவேண்டும் என்று வசனம் 36 கூறுகிறது. ஆனால் அந்த பலிகளின் தன்மை கொடுக்கப்படவில்லை. "நான் இஸ்ரயேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழு நாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள், இஸ்ரயேலில் பிறந்தவர்கள் எல்லோரும் கூடாரங்களில் வாசம்பண்ணவேண்டும், நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்." (லேவியராகமம் 23:42-43)

இந்த அறிவுரைகள் கிறிஸ்தவர்களுக்கு என்ன நோக்கத்தைக் கொண்டுள்ளது?"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. "(2தீமோத்தேயு3:16-17)

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில், வேதங்கள் கடவுளால் ஏவப்பட்டதாகவும், அன்று மட்டுமல்ல, இன்றைய வேத மாணவர்களுக்கும் லாபகரமானதாக இருக்கிறது என்று நினைவுப்படுத்தினார். இதன் பொருள் என்ன என்பதைப் பற்றிய கூடுதல் விளக்கம் மற்ற வேத புத்தகங்களிலும் காணப்படுகிறது. "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து..." (கொலோசேயர் 2:13-14)

பண்டிகை நாட்கள், யூத தேசத்தை

கிறிஸ்துவிடம் கொண்டு வருவதற்கான சட்டங்களின் ஒரு பகுதியாகும். அவர்கள் எகிப்தில் இருந்தபோதும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்குப் பயணம் செய்த போதும் அவர்களுடைய பாவமான நிலையையும் அதற்காக யெகோவா தேவன் அவர்களுக்குக் காட்டிய இரக்கத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டியதாக இருந்தது.

## நியாயப்பிரமாண உடன்படிக்கை



இந்த பண்டிகையின் நாட்களில், பத்து கட்டளைகளையும், ஒரு தேசமாக அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை அமைக்கும் பல சட்டங்கள் அனைத்தையும் மோசேயால் அவர்களுக்கு அமைக்கப்பட்டது. மோசே பிரமாணங்களை கொடுத்தபோது, இஸ்ரயேலர்கள் கடவுளிடம் வாக்குறுதிகளை அளித்தனர் - "மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தார், அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய், கர்த்தர் அருளின் எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்." (யாத்திராகமம்24:3) மோசே உடன்படிக்கைப் புத்தகத்தை ஜனங்கள் அனைவருக்கும் முன்பாக வாசித்து, "... இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று." (யாத்திராகமம் 24:8) நினைப்பூட்டினார்.

கிறிஸ்தவர்கள் பத்துக் கட்டளைகளின் கீழ் இருக்க வேண்டும் என்று நினைக்கும் ஜனங்கள் இருக்கிறார்கள். யூதர்களுக்கு இது நியாயப்பிரமாணத்தின் எழுத்துக்களைக் கடைப்பிடிக்கும் விஷயமாக இருந்தது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு, நியாயப்பிரமாணத்தின் சிக்கலைக் குறிப்பிடுகிறார். "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்." (யாக்கோபு 2:10) ஒரே ஒரு நபர் மட்டுமே நியாயப்பிரமாணம் முழுமையாக பின்பற்ற முடிந்தது, அது இயேசு கிறிஸ்து தான். ஒருவர் பத்துக் கட்டளைகளைப் பார்க்கும் போது, அவை மிகவும் எதிர்மறையாகவும், பல காரியங்கள் "கூடாது" என்றும் இருந்தது. இயேசு நியாயப்பிரமாணத்தின் உணர்வை சீஷர்களுக்கு அறிக்கைகளுடன் கற்பித்தார். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக, இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்." (மத்தேயு 22:37, 39, 40)

## ஓய்வு நாள்

கிறிஸ்துவின் பலியின் மூலம் பவுல் நமக்கு சொல்லும் காரியம் - "இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்." (ரோமர் 7:6) நாம் ஓய்வு நாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இன்னும் கிறிஸ்தவர்கள் விதித்துள்ளனர். பரிசேயர்களைப் போலவே, அவர்களும் ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பாரங்களைச் சேர்க்கிறார்கள். "பின்பு அவர்களை நோக்கி - மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது, ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் .." (மாற்கு 2:27-28)என்று இயேசு அவர்களிடம் கூறினார்.

"ஒவ்வொரு நாளும் ஒரு ஓய்வுநாள், கடவுளின் அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள், தேவன் ஓய்வெடுப்பது போல - விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் ஓய்வெடுக்கிறார்கள். " என்று சகோதரர் ரசல் எழுதினார். ஆனால் "தேவனுடைய ஜனங்களுக்கு

ஒரு ஓய்வு இருக்கிறது" (எபிரெயர் 4:9)

இது நாம் இப்போது அனுபவிக்கும் ஓய்வை காட்டிலும் ஒரு வித்தியாசமான ஓய்வு - உயிர்த்தெழுதலின் மாற்றத்திற்குப் பிறகு கிடைக்கும் உண்மையான ஓய்வு." ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. (R4996:4). "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28) என்று இயேசு நமக்கு உறுதியளிக்கிறார்.

## பஸ்கா

இயேசு பூமியில் வாழ்ந்த காலத்தில் அவர் பஸ்காவை அனுசரித்தார். இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த மாலையில் கடைசி பஸ்காவை அவர் அனுசரித்தார். பஸ்கா போஜனத்தின் முடிவில், ஒரு மாற்றம் நிகழும் என்பதை இயேசு அடையாளம் காட்டினார். சிலுவை மரணத்தில் முடிவடைந்த அவரது மாபெரும் பலியின் நினைவுகூருதல் இப்போது நினைவுகூரப்பட்டது.

"பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து, இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக் கிறது என்றார்." (லூக்கா22:19-20)

பஸ்கா, யூதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு பிரமாணம். நினைவுகூருதல் ஒரு வேண்டுகோளாக வைக்கப்பட்டது, நம்முடைய சார்பாக செலுத்தப்பட்ட மாபெரும் பலியை நினைவுகூர வேண்டும். "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1கொரிந்தியர் 11:26)

## புளிப்பில்லாத அப்பப்பண்டிகை

யூதர்கள் தங்கள் வீடுகளில் உள்ள புளித்த மாவை சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. புளிப்பு பாவத்தை அடையாளப்படுத்தும். எனவே இந்த



பண்டிகை, துர்குணம் பொல்லாப்பு என்பவைகளை புறம்பே களைந்து போடும் ஒரு ஜீவியத்தை சித்தரிக்கிறது. கிறிஸ்தவர்கள், சொல்லர்த்தமான பண்டிகையை கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும், இது பாவம் இல்லாத வாழ்க்கையை வகைப்படுத்துகிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். " (1கொரிந்தியர் 5:8) "இது இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு விளைந்த மகிழ்ச்சி, அமைதி, ஆசீர்வாதம் ஆகியவற்றைக் குறிக்கிறது, என்றும், இது ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் தகுதியின் மூலம் தனது பாவங்களை கடந்து செல்வதை உணர்ந்துகொள்வதன் மூலம் அனுபவிக்கும் மகிழ்ச்சி மற்றும் அமைதியின் மாதிரியாக உள்ளது" என்றும் ரசல் எழுதினார். (R5642:3).

## வாரங்களின் பண்டிகை

அசைவாட்டும் பலி செலுத்தப்பட்டு ஐம்பது நாட்களுக்கு பின் வாரங்களின் பண்டிகை அனுசரிக்கப்பட்டது. இதுவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கும் இடைப்பட்ட காலம். (அப்போஸ்தலர் 2:1-4) இந்த பழைய ஏற்பாட்டு பண்டிகைகளிலிருந்து பல்வேறு சித்திரங்களை வரையலாம்.

கிறிஸ்துவை சித்தரிக்கும் அசைவாட்டும் பலி, புளிப்பில்லாதது. ஏனெனில் அவர் பாவம் இல்லாமல் பரிபூரணமாக இருந்தார் - அதே சமயம் புளிப்புள்ள அப்பங்கள் சபை அங்கத்தினரை அடையாளப்படுத்துகிறன்றது. அவர்கள் இன்னும் பாவிகளாக இருந்தாலும் கிறிஸ்துவின் நீதியால்

அவர்கள் மூடப்படுகிறார்கள். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். " (2கொரிந்தியர் 5:21)

அந்த இரண்டு அப்பங்களைப் பற்றி மற்றொரு அடையாளம் என்னவெனில், அவைகள் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இரண்டு வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது. இவர்கள் பாவிகளாக இருந்தாலும், கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தினால் பரலோகத் தகப்பனுக்கு அர்ப்பணிக்கப்படுவதை சித்தரிக்கிறது. சகோதரர் ரசல் இந்தக் கருத்தை கொடுத்திருக்கிறார். "இரண்டு அசைவாட்டும் அப்பங்கள் - பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட மகா பெரிய பிரதான ஆசாரியரின் புண்ணியத்தின் மூலம் சிறு மந்தையும் மற்றும் திரள் கூட்டத்தாரும் ஏற்றுகொள்ளப்படுவதை அடையாளப் படுத்துகிறது." (R2271:1)

## எக்காளங்களின் பண்டிகை

இந்த எக்காளங்களின் பண்டிகையில், பாவ நிவாரண நாளுக்கென்று யூதர்கள் தங்களை ஆயத்தப்படுத்துவதற்காக ஒரு அழைப்பு கொடுக்கப்பட்டு அவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருந்தது. இது பாவநிவாரண நாளுக்கு பத்து நாட்களுக்கு முன்பு நடந்தது. இதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சித்திரம், இஸ்ரயேலுக்கு யோவான் ஸ்நானகனின் அழைப்பு. "அந்நாட்களில் யோவான் ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து - மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே." (மத்தேயு 3:1-3)

அவர்கள் மேசியாவின் வருகைக்கு ஆயத்தமாக இருந்தனர். துரதிர்ஷ்டவசமாக, சரியான இருதய நிலையோடு அவருடைய அழைப்பை அனைவரும் ஏற்கவில்லை. "பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு - விரியன் பாம்புக் குட்டிகளே, வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?" (மத்தேயு3:7)

## பாவநிவாரண நாள்

பாவநிவாரண நாள் பஸ்காவிலிருந்து ஆறு மாதங்கள் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த காலம் இயேசு ஞானஸ்நானம் பெற யோர்தானில் யோவான் ஸ்நானகரிடம் தன்னை வெளிப்படுத்தியதற்கு ஒப்பிடப்படுகிறது. யோவான் இயேசுவை அடையாளம் கண்டு அறிவித்தார். "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு - இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.." (யோவான் 1:29)

இயேசுவின் ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்காக அல்ல, மாறாக தம் தந்தையின் சித்தத்தைச் செய்ய அவர் அர்ப்பணித்ததற்கான வெளிப்புற அடையாளமாக இருந்தது. உலக லட்சியங்கள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தனது மூன்றரை வருட காலத்தை பலி செலுத்தும் ஆசாரியனாக ஆரம்பித்து, சிலுவையில் மரணம் அடைந்தார். "அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:7-8)

கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்த உலக லட்சியங்களை விட்டு, நம்முடைய திறமைகளையும், நம்முடைய பணங்களையும் கடவுளுடைய சித்தத்தைச் செய்வதற்குப் பயன்படுத்த தீர்மானம் எடுக்க வேண்டும். நம்முடைய ஞானஸ்நானம் என்பது நம்முடைய இருதய நிலையை வெளிக்காட்டுவதாகும். நாம் இன்னும் பூரணப்படவில்லை, எனவே நாம் இன்னும் நம்முடைய பழைய சரீரத்தில், மாம்சத்தில் இருக்கிறோம். நம்முடைய புது சிருஷ்டி அதனுடன் போராடவேண்டியதாக உள்ளது. "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."(கலாத்தியர் 5:24)

தேவ ஆட்டுக்குட்டி

# வெளியேற்றத்திலிருந்து நினைவுகூருதல் வரை



""இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும்...மத்தியிலே நிற்கக்கண்டேன்." (வெளிப்படுத்தல் 5:6)

**Jim Parkinson**

முதல் பஸ்கா ஆட்டுக்குட்டி, முதலில் அதன் இரத்தத்தின் பாதுகாப்பில் இருந்த இஸ்ரயேலின் முதற்பேறானவர்களையும், அதன் பின் இறுதியில் இஸ்ரயேலர் அனைவரையும் மரணத்திலிருந்து விடுவித்தது. அதற்கு பின் வந்த பஸ்காக்கள், அனைத்து இஸ்ரயேலர்களின் விடுதலையை (பல ஜாதிகளையும் கூட)நினைவுகூருவதற்காக, முதல் பஸ்காவின் வருடாந்தர நினைவுகூருதலாக இருந்தது.

எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு நிழலாக இருந்தது. அவர் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார். "என் நினைவாக இதை செய்யுங்கள் " என்பதை நாம் ஒவ்வொரு வருடமும் கூடிவருகையில், அவருடைய பலியை நினைவுகூருகிறோம். (யாத்திராகமம் 12:1-6, 12:14 உபாகமம் 16:1-6, எபிரெயர் 2:9, ரோமர் 5:18-19, லூக்கா 22:19, 1கொரிந்தியர் 11:24-25)

### வெறியேற்றம் (யாத்திராகமம்) மற்றும் தெய்வீக திட்டம்

இன்றைய வாசகருக்கு யாத்திராகமம் ஒரு பெரிய அர்த்தத்தைக் கொண்டுள்ளது. எகிப்தில் ஏற்பட்ட வாதைகளையும், கடல் வழியாக கடவுளின் விடுதலையையும் சங்கீத புத்தகம்



நினைவுபடுத்துகிறது. (சங்கீதம் 105:26-37, 136:10-15)எகிப்தில் ஏற்பட்ட முதல் வாதை - தண்ணீர் இரத்தமாக மாறியது. இது எகிப்தில் இருந்து வெளியேறிய நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு நிகழ்வை சித்தரிக்கிறது என்று வெளிப்படுத்துதல் **11:6** தீர்க்கதரிசனமாக கூறுகிறது. 15 மற்றும் 16ம் அதிகாரங்கள் நிஜமான ஏழு வாதைகளைப் பற்றி கூறுகிறது. இதை தொடர்ந்து கிறிஸ்து திரும்பிய பிறகு பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலின் தொடக்கத்தில் ஆலயம் திறக்கப்பட்டது. மோசே இஸ்ரயேலரை கடல் வழியாக நடத்தியதை "மோசேவுக்குள் ஜனங்களின் ஞானஸ்நானம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கிறார். பின்னர் வரவிருக்கும் காரியங்களுக்கு இது ஒரு நிழல் (உருவகம், உதாரணம், உருவம்)என்று அவர் அறிவிக்கிறார். (1கொரிந்தியர் 10:1-2, 11)

சுருக்கமாக, மோசே எகிப்துக்கு வருவது இயேசுவையும் அவரது முதல் வருகையையும் சித்தரிக்கிறது. எகிப்து இந்த தற்போதைய தீய உலகத்தை சித்தரிக்கிறது, அதே நேரத்தில் பத்து வாதைகள் இயேசுவின் முதல் வருகையில் தொடங்கி அவரது இரண்டாம் வருகையின் போது முடிவடைகின்றது.

பஸ்கா ஆட்டுக்குட்டியைக் கொல்வது கடவுளின் உண்மையான ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் பலிக்கு ஒத்திருக்கிறது. இஸ்ரயேலின் முதற்பேறானவர்களின் விடுதலை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது முதற்பேறான சபையின் விடுதலையைக் குறிக்கிறது.அதே சமயம் எகிப்திய முதற்பேறானவரின் மரணம் இந்த யுகத்தின் முடிவில் ஆட்சியாளர்களின் பரஸ்பர அழிவுக்கு ஒத்திருக்கிறது. பஸ்கா பண்டிகையின் ஏழு நாள் உண்மையில் கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு இராஜ்யத்தில் உயிர்த்தெழுதலின் மூலம் உலக விடுதலையுடன் தொடங்குகிறது. ("Studies in the Scriptures," Volume 6, The New Creation, the first three pages of Study 11, "The Passover of the New Creation.")

பத்து வாதைகள் இரண்டு குழுக்களாக



உள்ளது - முதல் மூன்று வாதைகள் ஆரோனால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டது, மேலும் அவை எகிப்தியர்கள் மற்றும் இஸ்ரயேலர்கள் மீதும் வந்தது. கடைசி ஏழு வாதைகளை மோசே நிர்வகித்தார், யெகோவா தேவன் தம் ஜனங்களுக்கும் பார்வோனின் ஜனங்களுக்கும் இடையே ஒரு பிரிவை ஏற்படுத்தினார். இந்த பத்து வாதைகள் சுவிசேஷ யுகம் முழுவதையும் நடக்கக்கூடியவைகள். கடைசி ஏழு வாதைகளின் போது மோசே முக்கிய பங்கை வகிக்கும் போது, தற்போதைய தீய உலகின் தீமைகளுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்தும் இரண்டாம் வருகையில் வந்திருக்கும் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறார். {நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, ஏழு நாட்கள் ஆசாரியர்கள் எரிகோவைச் சுற்றி வந்தனர், கடைசி நாளில் ஏழு முறை எரிகோவை சுற்றி வந்தார்கள். சுவிசேஷ யுகம் பெரும்பாலும் ஏழு காலகட்டங்களாக (கடைசி நாள்) பிரிக்கப்பட்டதாகக் காட்டப்படுகிறது. அதே சமயம் கடைசி நாளின் ஏழு காலங்கள், சுவிசேஷயுகத்தின் "கடைசி நாள்" - அதன் அறுவடை வரையிலான ஏழு கடைசி வாதைகள் என்று குறிக்கிறது.}

அதே நேரத்தில் யெகோவா தேவன் தம் ஜனங்களை பாபிலோனிலிருந்து வெளியே வரவழைப்பதன் மூலம் தம் ஜனங்களை பிரிக்கிறார். "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்." (வெளிப்படுத்துதல் 18:1-4)

முதல் மூன்று வாதைகள் எதைக் குறிக்கலாம்? ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாம் வருகைகளுக்கு இடையில் ஏதாவது ஒன்றைப் அடையாளப்படுத்த வேண்டும், இது உலக ஒழுங்கை சேதப்படுத்துவதாக இருக்கும், ஆனால் உண்மையுள்ள கிறிஸ்தவர்களையும் துன்புறுத்தலில் இருந்து விடுவிக்கக்கூடாது. ரோமானியப் பேரரசின் வீழ்ச்சி, சீர்திருத்தம் மற்றும் பிரெஞ்சுப் புரட்சி ஆகியவை முதல் மூன்று வாதைகள் என்று இந்த எழுத்தாளர் கூறுகிறார்.

இஸ்ரயேல் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அவர்கள் ஏழு நாள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை கொண்டாடினர், இது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. (1) முதல் மூன்று நாட்களுக்கு, மோசே இஸ்ரயேலை வனாந்தரத்தின் எல்லை மற்றும் கடலின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றார். (2)நான்காம் நாளில் பார்வோனும் அவனது படை வீரர்களும் மீண்டும் இஸ்ரயேலை அச்சுறுத்தினர், ஆனால் மோசே (கடவுளின் அறிவுறுத்தலின்படி) இஸ்ரயேலர் பாதுகாப்பாக கடக்க கடலைப் பிரித்தார். பார்வோனும் அவனது சேனைகளும் கடக்க முயன்றனர், ஆனால் அவர்கள் மூழ்கி அழிக்கப்பட்டனர். (யாத்திராகமம் 14:1-28) (3)இஸ்ரயேல் அதன் உண்மையான பணியை நிறைவேற்றவும் தங்கள் கடவுளாகிய யெகோவா தேவனுக்குப் பலியிடவும் மூன்று நாட்கள் வனாந்தரத்தில் பயணம் செய்தார்கள். (யாத்திராகமம் 7:2, 16, 8:20, 27)

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல் மூன்று நாட்களுக்கு, இஸ்ரயேல் பார்வோனின் செல்வாக்கின் கீழும், சீர்கேடு என்ற புளித்த மாவின் கீழும் இருக்கவில்லை. இது கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யத்தை மாதிரியாகக் காட்டலாம். பார்வோன் மற்றும் அவனது சேனைகளுடனான சந்திப்பு, கடவுளின் மக்களை அழிக்கும் ஒரு கடைசி முயற்சியாக, "கொஞ்ச காலம்" அதாவது ஒரு குறுகிய காலத்திற்கு சாத்தான் விடுவிக்கப்படுவதைக் குறிக்கிறது. ஆனால் சாத்தானும் அவனுடைய படையும் இறுதியாக இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:7-10) பண்டிகையின் கடைசி மூன்று நாட்கள், நித்தியமான பரிபூரண யுகங்களைக் குறிக்கிறது. அதாவது யுகா யுகங்களைக் குறிக்கிறது. அப்பொழுது பூரணப்படுத்தப்பட்ட முழு உலகமும் யெகோவா தேவனுக்கு என்றென்றும் ஊழியம் செய்யும். இவ்வாறு

பஸ்கா ஆட்டுக்குட்டியும், பின்வரும் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையும் யுகங்களின் தெய்வீக திட்டம், மனுக்குலத்தின் மீது என்றென்றும் கடவுளுடன் இணக்கமான உறவைக் கொண்டுவரும் என்பதை நமக்குக் காட்டுகிறது.

## வெறியேற்றம் அல்லது யாத்திராகமம் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மீது கவனம் செலுத்துகிறது

மற்ற வாதைகளை காட்டிலும் பத்தாவது மற்றும் கடைசி வாதையைப் பற்றி வேதாகமம் அதிகமான விளக்கங்கள் கொடுக்கிறது. (யாத்திராகமம் 11-12) அதன் பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்ற ஆணாக இருக்கவேண்டும். இயேசுவே அந்த "தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29, வெளிப்படுத்துதல் 5:5-6) "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்..." (எபிரெயர் 7:26) நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலி, விசுவாசமுள்ள சபைக்கு மட்டுமல்ல, இந்த முழு உலகத்தையும் மரணத்திலிருந்து விடுவிக்கக்கூடியது.

ஆட்டுக்குட்டி நெருப்பினால் சுடப்படவேண்டும் - "அதை பச்சையாகவோ, நீரில் வேகவைத்தோ அல்ல, நெருப்பினால் சுட்டு புசிக்கவேண்டும். " இயேசு தம் ஊழியத்திலோ, சிலுவையிலோ, தம்முடைய வாழ்க்கையின் முழுமையான பலியில் இருந்து சற்றும் குறைத்துக்கொள்ளவில்லை.

பஸ்கா ஆட்டுக்குட்டியை "புளிப்பில்லாத அப்பம்" மற்றும் "கசப்பான கீரை" ஆகியவற்றுடன் புசிக்கவேண்டும். (யாத்திராகமம் 12:8) முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர், கெடுக்கப்படாத போதனைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இவைகள் வேதாகமத்தில் இருந்து வருகிற தேவனுடைய வார்த்தை. இயேசு கிறிஸ்துவின் தன்னார்வ பலியை, "அனைவருக்குமான மீட்கும் பலி" என்று விவரிக்கிறது. இதன் மூலம் அவர் "ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார்." அவர் வழியாக, "தேவன் அவர்கள் கண்களின் கண்ணீர் யாவையும்துடைப்பார், இனி மரணமும் இராது." (1 தீமோத்தேயு 2 : 6, எபிரெயர் 2 : 9, வெளிப்படுத்தல் 21:3-4)

"அவர்கள் கசப்பான கீரையோடு அதை புசிக்கவேண்டும் "(யாத்திராகமம் 12:8) "ஊழியக்காரன் தன் எஜனமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்..." (யோவான் 15:20) நம்முடைய ஆண்டவரின் முன்மாதிரியை உண்மையாகப் பின்பற்றுவதால் ஏற்படும்சகப்பான அனுபவங்களிலிருந்து நாம் பின்வாங்க (குறுக்கிக்கொள்ள) கூடாது.

### பஸ்கா ஆட்டுக்குட்டியின் நினைவுகூருதல்

அடையாளமாகவோ, நிழலாகவோ, பஸ்கா ஆட்டுக்குட்டி அனைத்து இஸ்ரயேலர்களையும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கான மையப் புள்ளியாக இருந்தது. பலி மற்றும் விடுதலையின் இந்த நாளை ஒருபோதும் மாற்ற முடியாது. "அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது, அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக, அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்." (யாத்திராகமம் 12:14) இந்த அனுசரிப்புகள் மீண்டும் மீண்டும் அனுசரிக்கப்படாமல், அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் விடுவிப்பதற்கான வருடாந்திர நினைப்பூட்டல்களாக இருக்க வேண்டும்.

இஸ்ரயேலின் பஸ்கா ஆட்டுக்குட்டியைக் கொல்வது, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் பலியைக் குறிக்கிறது. அவருடைய பலி முழு உலகத்தையும், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும். அதுபோலவே, நம்முடைய வருடாந்திர நினைவு ஆசரிப்புகள், கிறிஸ்துவின் பலியை மீண்டும் நிகழ்த்துவதல்ல, மாறாக, அனைவருக்காகவும் அவர் செலுத்தின பலியை நினைவுகூரவேண்டும். (எபிரெயர் 7:27) "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக் கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." (ரோமர் 5:18,19) "இதை என் நினைவாக செய்யுங்கள்" (லூக்கா22:19)

## வெளியேற்றத்தின் போது அனுசரிக்கப்பட்ட பாஸ்கா நாள்

வெளியேற்றத்தின் போது, நீசான் 14ம் தேதி சூரிய உதயத்தில் துவங்கியிருந்தால், வேதவசனங்களில் சில சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியதாக இருக்கும். பஸ்கா ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டு, சுடப்பட்டு, அந்தி வேளையில், "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்" புசிக்கப்பட்டது. (யாத்திராகமம் 12:6, எண்ணாகமம் 9:3,5,11, உபாகமம் 16:6) இஸ்ரயேலர்கள் காலை வரை தங்கள் வீடுகளை விட்டு வெளியே வரக்கூடாதிருந்தது. (யாத்திராகமம் 15:22) பார்வோன் மற்றும் எகிப்தியர்களின் அவசரக் கோரிக்கையின் பேரில் (யாத்திராகமம் 12:11, 30-33) நிசான் 15 அன்று சூரிய உதயத்திற்குப் பிறகு அவர்கள் விடியற்காலையில் புறப்படத் தயாராக இருக்கவேண்டும். (எண்ணாகமம் 33:2)14ம் தேதி சூரிய அஸ்தமனத்தில் (14ம் தேதி நடுப்பகுதியில்) பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, புளிப்பில்லாத அப்பம் புசிக்க தொடங்கும் போது புளிப்புக்கு எதிரான தடை விதிக்கப்பட்டது. மேலும் 15 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை பகல்நேரம் முழுவதும் தொடர்ந்து சூரிய அஸ்தமனத்தில் (20 ஆம் தேதி நடுப்பகுதியில்) முடிந்தது. இது ஏழு நாள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை. (யாத்திராகமம் 12:18) இந்த விளக்கம் - எகிப்தில் (குறைந்தது ஒரு வருடத்திற்குப் பிறகு) ஒரு நாள், சூரிய உதயத்தின் தொடக்கமாக கணக்கிடப்பட்டது என்று அனுமானத்தைப் பொறுத்தது. வேதாகமத்தில் இதற்கு ஆதரவான வசனங்கள் உள்ளது. (ஆதியாகமம் 19:34, "நேற்று" என்பது "நாளை" என்பதிலிருந்து வேறுபடுத்தப்படுகிறது. மத்தேயு 28:1 மற்றும் மாற்கு 11:11-12, அப்போஸ்தலர் 4:3, லேவியராகமம் 23:32)

அந்த "இரண்டு சாங்காலங்களுக்கு இடையில்" என்பது சூரிய அஸ்தமனத்திற்குப் பிந்தைய ஒரு காலகட்டத்தை யாத்திராகமம் 16:12-13ல் காண்பிக்கப்படுகிறது. அங்கு புலம்பெயர்ந்த காடைகள் இருள் மறையத் தொடங்கும் சாயங்காலத்தில் கடலில் இருந்து சீனாய் உயரத்திற்கு ஏறிச் செல்லும்,அப்பொழுது இஸ்ரயேல் அந்த "இரண்யடு சாயங்காலங்களுக்கு இடையில்" அவற்றை சாப்பிடுவார்கள். அது ஒரு மாலை முதல் அடுத்த மாலை வரை அல்ல, அதிக பட்சம் சில மணிநேரங்கள் மட்டுமே என்று யாத்திராகமம் 30:7-8இல் காட்டப்பட்டுள்ளது, அங்கு பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள விளக்குகள் காலையில் திரி கத்திரிக்கப்படவேண்டும் மற்றும் "இரண்டு சாங்காலங்களுக்கு இடையில்" எரிய விட வேண்டும். அதாவது இருட்டாகும் போது, அதனுடைய ஒளி அவர்களுக்கு பயன்படுகிறது. பிற்காலத்தில் பஸ்காவை அனுசரிக்கும் இடம் மாற்றப்பட்டது. (உபாகமம் 16:6, கட்டளையின்படி) நடைமுறை காரணங்களுக்காக மணிநேரத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

கடைசி இரவு

# அவசர உணவு மற்றும் விரைவான வெளியேற்றம்



"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டாரே "(1கொரிந்தியர் 5:7)


பஸ்காவைப் பற்றிய அடிப்படைக் கேள்வி, ஐந்து வசனங்கள் மற்றும் அதன் விளைவாக வரும் மூன்று அனுமானங்களைச் சுற்றி வருகிறது. "அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரயேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்திலே (இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்) அதை அடித்து...அன்று இராத்திரியிலே... அதைப் புசிக்கக்கடவர்கள். " (யாத்திராகமம் 12:6-8)

"அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக் கொண்டும்,உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக் கடவீர்கள், அது கர்த்தருடைய (யெகோவாவின்) பஸ்கா."(யாத்திராகமம் 12:11)

"...பஸ்காவை அடித்து..... விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலைவிட்டுப் புறப்படவேண்டாம்." (யாத்திராகமம் 12:21,22)

"எகிப்தியர் - தீவிரமாய் ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள்." (யாத்திராகமம் 12:33)

"முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டுப் புறப்பட்டார்கள், பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க, இஸ்ரயேல் புத்திரர் பெலத்தகையுடன் புறப்பட்டார்கள். அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன் பிள்ளைகளையெல்லாம் அடக்கம் பண்ணினார்கள், அவர்கள் தேவர்களின்பேரிலும் கர்த்தர் நீதிசெலுத்தினார். பின்பு இஸ்ரயேல் புத்திரர் ராமசேசிலிருந்து புறப்பட்டுப்போய் சுக்கோத்திலே பாளயமிறங்கினார்கள்." (எண்ணாகமம் 33:3-5)



சூரிய அஸ்தமனத்தில் நாள் தொடங்கி, பஸ்கா ஆட்டுக்குட்டி சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு கொல்லப்பட்டு, இஸ்ரயேலர்கள் சூரிய உதயத்திற்குப் பிறகு அவசரமாக வெளியேறி இருப்பார்களானால், பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து புசித்து, ஒரு நாள் கழித்து புறப்பட்டதாக நாம் எவ்வாறு கணக்கிட முடியும்?

### நாள் கணக்கிடுதல்

பழங்கால வரலாறு முழுவதிலும், நாளின் தொடக்கத்தை கணக்கீடுதல், காலத்திக்குக் காலம் இடத்துக்கு இடம் மாறியிருக்கிறது. கி.பி முதல் நூற்றாண்டில், அதாவது புதிய ஏற்பாட்டு காலங்கள் பற்றி பிலினி கூறுகையில் - "பாபிலோனியர்கள் இரண்டு சூரிய உதயங்களுக்கு இடைப்பட்ட காலத்தை கணக்கிடுகிறார்கள், அத்தேனியர்கள் இரண்டு சூரிய அஸ்தமனங்களுக்கு இடையில் உள்ள காலங்களையும், அம்பரியன்கள் (மத்திய இத்தாலி) மதியம் முதல் மதியம் வரை, எல்லா இடங்களிலும் சாதாரண ஜனங்கள் விடியற்காலையில் இருந்து இருள் வரையிலும் கணக்கிடுகிறார்கள். மேலும் ரோமானிய பாதிரியர்கள் மற்றும் அதிகாரிகள் உத்தியோக பூர்வமாக நாளை நிர்ணயித்தவர்கள், மேலும் எகிப்தியர்கள் மற்றும் ஹிப்பர்கஸ், நள்ளிரவு முதல் நள்ளிரவு வரையிலான காலத்தை கணக்கிடுகின்றனர்."

ஆதியாகமம் 1ம் அதிகாரத்தில் வரும் ஒரு நாள் 24 மணி நேரம் என்ற அடிப்படையில் விளக்கினால்,அது நண்பகலில் தொடங்கும். "சாயங்காலமும் விடியற்காலமுமாகி, முதலாம் நாள் ஆயிற்று." என்று 5ம் வசனம் கூறுகிறது. இதற்கு நேர்மாறாக, ஆதியாகமம் **19:34** ல் பகல் (மறுநாள்) இரவுக்குப் பிறகு வரும் ஒரு நாளாக காட்டுகிறது - ஒரு சூரிய உதயக் கணக்கீடு. எண்ணாகமம் 11:32 மற்றும் 33:3இல் இரவுக்குப் பின் "அடுத்த நாள்" என்பது சூரிய உதயத்தில் தொடங்குவதாகக கணக்கிடப்பட்டது. புதிய ஏற்பாட்டின் ஒரே வசனம், நாளின் தொடக்கத்தை தெளிவாக வரையறுக்கிறது. மத்தேயு **28:1**"ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில்,...."இது வியக்கத்தக்க வகையில் சூரிய உதயக் கணக்குடன் மட்டுமே ஒத்துப்போகிறது.



இஸ்ரயேலர்கள் வெளியேறும் நேரத்தில், அந்த நாள் இன்னும் சூரிய உதயத்தில் தொடங்குவதாகக் கருதப்பட்டால், அது எகிப்தியர்களின் நடைமுறையாக இருந்திருந்தால், இஸ்ரயேலர்கள் புறப்படுவதில் கூடுதலாக ஒரு நாள் தாமதத்தை முன்மொழிவது தேவையற்றது. இரண்டும் ஒரே நாட்காட்டி நாளில் இருக்கும் என்பதால்,மதியம் அல்லது மாலையில் பஸ்கா ஆட்டுக்குட்டி கொல்லப்படுவதற்கு இத்தகைய கணக்கீடு சமமாக இடமளிக்கும். இந்த பிந்தைய பிரச்சனையின் தீர்வு "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தை மட்டுமே சார்ந்துள்ளது.

### "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்"

"பெய்ன் ஹா கர்பயிம்" (beyn ha gharbayim)என்ற எபிரெய எழுத்து ஒருமையோ அல்லது பன்மையோ அல்ல. ஆனால் ஜோடியாக வரும் விஷயங்களுக்கு சொல்லப்படுகிறது. எனவே "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்" என்று பொருள்படும். இந்த வெளிப்பாடு பதினோரு முறை பயன்படுத்தப்படுகிறது. யாத்திராகமம் 12:6, 16:12, 29:39, 41, 30:8,லேவியராகமம் 23:5, எண்ணாகமம் 9:3, 5, 11, 28:4, 8

யாத்திராகமம் 29:39-41 மற்றும் எண்ணாகமம் 28:4-8இல் இரண்டு ஆட்டுக்குட்டிகளின் தொடர்ச்சியான காணிக்கை, ஒன்று காலையிலும் மற்றொன்று இரண்டு சாயங்காலங்களுக்கு இடையிலும் செலுத்தப்பட்டது. இந்த வேறுபாடு நாளின் இரண்டு நேரங்களை வேறுபடுத்துகிறது. அதாவது "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்" ஒரு சூரிய அஸ்தமனத்திற்கும் அடுத்து சூரிய அஸ்தமனத்திற்கும் இடையில் இருக்க முடியாது. இதேபோல் யாத்திராகமம் 30:7,8இல், பிரதான ஆசாரியர் ஆரோன், காலையில் விளக்குகளை ஆயத்தப்படுத்தி, இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில் அவைகளை ஏற்ற வேண்டும். (சூரிய ஒளி மங்கி அல்லது மறைந்துவிடுவதால்)

இந்த வெளிப்பாடு யாத்திராகமம் 16:12-13இல் மேலும் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. "நீங்கள் சாயங்காலத்தில் (இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்)இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திர்ப்தியாகி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார்... சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக்கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது." வசந்த காலத்தில் புலம்பெயர்ந்த காடைகள் அதிக எண்ணிக்கையில் வடக்கே பறந்து உயரத்தில் உயர்ந்து இஸ்ரயேலர்கள் இருந்த சீன் வனாந்தரத்தை அடையும். இவைகள் சூரிய அஸ்தமனம் அல்லது அந்தி நேரத்தில் குடியேறும். (அதன் பிறகு பறப்பதும் குடியேறுவதும் மிக ஆபத்தானதாக இருக்கும்.) எனவே, இந்த இரண்டு வசனங்களும் "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்" என்பது சூரிய அஸ்தமனத்திற்குப் பின் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கிறது.

பிற்பகல் 3:00 PM பற்றிய பரிசேயர்களின் எண்ணத்திற்கு மாறாக, ஜாக் ஃபினேகன் கூறுவது என்னவெனில், "சதுசேயர்களும், சமாரியர்களும், எப்படியிருந்தாலும் ஆட்டுக்குட்டியை கொல்வது சூரிய அஸ்தமனத்திற்கும் இருளுக்கும் இடையில் நடக்கவேண்டும் என்ற நம்பினர். பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றி யூபிலிகளின் புத்தகம் கூறும்போது இதை ஒப்புக்கொள்கிறது. வெளிச்சத்தின் எந்த நேரத்திலும் அதைக் கொல்வது அனுமதிக்கப்படாது, ஆனால் மாலையின் எல்லைக்குட்பட்ட காலத்தில், அதை மாலை நேரத்தில் இரவின் மூன்றாம் பகுதி வரை புசிக்கலாம். (49:12) யாத்திராகமம் 12:6 ல் "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையே" என்பது "இரண்டு சூரியன்களுக்கு இடையே" என்றும், மேலும் இது சூரியன் மறைவதற்கும், நட்சத்திரங்கள் வெளிவருவதற்கும் இடைப்பட்ட நேரத்தைக் குறிக்கும் என்றும் (The Targum of Onkelos) விளக்கம் அளிக்கிறார்.

எனவே, பொருத்தமான ஒத்த பொருள் ஆங்கிலத்தில் " twilight ". இதற்கு ஆங்கிலோ சாக்சன் வார்த்தை "இரண்டு + லோஹ்ட்"( two + டணிடிாவ) என்பதற்கு இரண்டு வெளிச்சங்கள் என்று பொருள். யூத பப்ளிகேஷன் சொசைட்டி (1917) மற்றும் டேவிட் ஹெச் ஸ்டேர்ன் (எபிரெய கிறிஸ்தவர்) இருவரும் அதை "அந்தி நேரம்" என்று அழைக்கின்றனர்.

எகிப்தில் அனுசரிக்கப்பட்ட பண்டிகை

யாத்திராகமம் 12:18இல் விவரிக்கப்பட்டுள்ளது. சொல்லர்த்தமாக அது கூறுவது என்னவெனில் "முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலந்தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம் வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள். " (இந்த வார்த்தைகள் லேவியராகமம் 23:32 ம் வசனத்திற்கு ஏறக்குறைய இணையாக உள்ளது.) கடந்த 14ம் தேதி புளிப்பில்லாத அப்பம் சாப்பிட்டனர். அன்றைய நாள் சூரிய உதயத்திலிருந்து கணக்கிடப்பட்டதால், மதியம்மற்றும் மாலை ஆகிய இரண்டு நிகழ்வுகளும் 14 ஆம் தேதி கணக்கிடப்பட்டன. சூரிய அஸ்தமன கணக்கிற்கு மாற்றினால் மாலை நிகழ்வுகள் 15ம் தேதி கணக்கிடப்படும்.

**தீவிரமாக**

இஸ்ரயேலர் முழுமையாக உடையணிந்து, கையில் தடியுடன் காலில் காலணிகளுடன் பஸ்காவை துரிதமாக புசிக்கவேண்டும். விடியற்காலையில் செல்லத் தயாராக இருந்தனர். ஆனால் "... ஆபிப்மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினாரே" (உபாகமம் 16:1) என்று வேதம் சொல்லவில்லையா ? சூரிய உதயத்திற்கு முன் இஸ்ரயேலர் வெளியேறியதாக இது கூறுகிறதா ? இல்லை. இது கடவுளின் பகுதியை விவரிக்கிறது, மனிதனின் பகுதியை அல்ல. "நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்." (யாத்திராகமம் 12:29) பார்வோனின் கட்டளையின் படி மோசேயும் ஆரோனும் மட்டுமே இரவில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். (யாத்திராகமம் 12:31) மனுஷனுடைய பகுதி சூரிய உதயத்தில் தொடங்கியது - உண்மையான புறப்பாடு - அதற்கு முன் பஸ்காவின் அதிசயம் நிகழ்ந்தது.

அதற்குபின், எகிப்திலிருந்து புறப்படுவதற்கு முன், எல்லா ஜனங்களையும் ராமஸேசில் ஒன்று சேர்க்க ஒரு நாள் எடுத்திருக்குமோ ? இல்லை. அவர்கள் ராம்ஸேசில் பாளையம் இறங்கியதாக கூறப்படவில்லை. ஆனால் அவர்கள் ராம்ஸேசிலிருந்து புறப்பட்டு சுக்கோத்தில் முதலில் பாளையம் இறங்கினார்கள். (யாத்திராகமம் 12:37)எந்த இஸ்ரயேலர்களும் எகிப்தில் தங்கி விடவோ அல்லது தாமதப்படுவதை எகிப்தியர்கள் மிகவும் பயந்தனர். "...தீவிரமாய் ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள். ...இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள்.கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள், இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்." (யாத்திராகமம் 12:33-36) அதனால் தாமதம் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் ஒரு பொதுவான சுகாதார நோக்கத்துடன், தலைச்சன்கள் மரித்து சுமார் ஆறு முதல் பதினெட்டு மணிநேரத்திற்குள் எகிப்தியர்கள் மரித்தவர்களை அடக்கப்பண்ணார்கள். (எண்ணாகமம் 33:4)

அந்நாளிலே இஸ்ரயேலர்கள் புறப்பட்டார்கள். நிசான் 15 ஆம் தேதி "பஸ்காவுக்கு அடுத்த நாள்" (எண்ணாகமம் 33:4) கோசேன் தேசத்தில் உள்ள ராம்சேஸை விட்டு இஸ்ரயேல் புறப்பட்டது. "பஸ்காவுக்கு மறுநாளிலே... இஸ்ரயேல் புத்திரர் பெலத்தகையுடன் புறப்பட்டார்கள்." (எண்ணாகமம் 33:3) எனவே, பஸ்காவை நிசான் 14 அன்று (வெளியேற்றத்தின் நேரத்தின் கணக்கின்படி) அவர்கள் புசித்திருக்கவேண்டும். என்று தோன்றுகிறது, ஏனென்றால் மறுநாள் நிசான் 15 ஆக இருந்தது. "நீ தீவிரமாய் எகிப்துசேதத்திலிருந்து புறப்பட்டபடியினால்..." (உபாகமம் 16:3)

ஏழு நாள் பஸ்கா பண்டிகையின் முதல் நாளுக்குப் பின் அவர்கள் முதலில் சுக்கோத்தில் பாளையம் இறங்கினார்கள். தற்காலத்தில் இஸ்மாலியா என்று அழைக்கப்படும் இடம் அருகில் (சூயஸ் கால்வாய்)உள்ள ஈத்தாமில் இரண்டாவதாக பாளையம் இறங்கினார்கள். இது கோசேன் தலைநகரான ஹாட்வரெட்டின் கிழக்கு தென்கிழக்கே முப்பது மைல் தொலைவில் இருந்தது. அவர்கள் புறப்பட்டு நடு காலையில் ஆரம்பித்து மணிக்கு குறைந்தது இரண்டு மைல்கள் நகர்ந்திருக்கவேண்டும். ஆக இரண்டு நாட்களில் அவர்கள் பதினேழு மணிநேர பயணம் செய்திருக்கவேண்டும். மூன்றாம் நாள், வடக்கே



பதினெட்டு மைல் தொலைவில், செங்கடலின் மற்றொரு எச்சத்திற்குச் சென்றார்கள். அவர்கள் பயன்படுத்த வேண்டாம் என்று முன்பு கட்டளைப் பெற்ற பெலிஸ்திய சாலைக்கு அருகாமைக்கு வந்தார்கள். இந்த பயணத்திற்கு இன்னும் பத்து மணிநேரம் சென்றது. செங்கடலைக் கடக்க ஐந்து மணிநேரம் வரை செலவழித்திருக்கலாம், அதைத் தொடர்ந்து நான்காவது நாளை உள்ளடக்கிய விடுதலைக்காக நன்றிப் பாடல் பாடப்பட்டது. பஸ்கா பண்டிகையின் மீதமுள்ள மூன்று நாட்கள் வனாந்தரத்திற்குள் செல்லும் மூன்று நாட்களின் பயணமாகும், இதற்காக அவர்கள் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டார்கள். (யாத்திராகமம் 3:18)

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, வாதைகளின் காலம் தற்போதைய தீமையான உலகத்தை (தீமை ஆதிக்கம் செலுத்தும் உலகம்)குறிக்கிறது. அதே நேரத்தில் எகிப்திய தலைச்சன்களின் மரணம் அர்மகெதோனைக் குறிக்கிறது. இதன் போது உலகம் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறது அதாவது பரஸ்பர உறுதியளிக்கக்கூடியஅழிவு.

கடைசி வாதைக்கு சற்று முன் பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலியானது, நமக்கு கிறிஸ்துவின் பலி முழு உலகத்தையும் பாவம்,வியாதி, துக்கம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து விடுவிக்க முன்நிபந்தனை என்பதை நினைப்பூட்டுகிறது. பஸ்காவின் முதல் மூன்று நாட்கள், இஸ்ரயேலர் பார்வோனின் செல்வாக்கின் கீழ் இருந்து வெளியேறுவது, கிறிஸ்துவின் ஆயிரவருட இராஜ்யத்தில், சாத்தான் கட்டப்பட்டபோது, ஜனங்கள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள் என்பதை சித்தரிக்கிறது. கர்த்தருடைய ஜனங்கள் கடலைக் கடந்த பின், பார்வோனும் அவனுடைய சேனைகளும் மூழ்குவதைப் பார்ப்பது, சாத்தான் கட்டவிழ்த்த பின்னர் அழிக்கப்படும் அந்த "கொஞ்ச காலத்தின்" முடிவை காட்டுகிறது. பண்டிகையின் ஐந்து முதல் ஏழு நாட்கள் நித்தியமான யுகங்களை நிழலிடுகிறது. அதில் மனுக்குலம் பூரணப்படுத்தப்படுவார்கள். பரிசுத்தமான சபை கூடுதலின் முதல் நாள், சந்தேகத்திற்கு இடமின்றி உலகில் மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்த மகிழ்ச்சியை காட்டுகிறது. மேலும் பண்டிகையின் கடைசி நாள் பூரணப்படுத்தப்பட்ட உலகத்தின் மேல், "நித்திய மகிழ்ச்சி ... இருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள், சஞ்சலமும் தவிப்பு ஓடிப்போம்." (ஏசாயா35:10)

## வெளியேற்றத்திற்கு பின் வந்த மாற்றங்கள்

வெளியேற்றத்திற்கு பின் பஸ்கா அனுசரிப்புகளுக்கு, இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன, ஒன்று கட்டளை மற்றும் மற்றொன்று நடைமுறை காரணங்கள். அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறியப் பிறகு நாற்பதாம் ஆண்டில் மோசே இவ்வாறு கட்டளையிட்டார் - "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன்னுடைய வாசல்களில் எதிலும் நீ பஸ்காவை அடிக்கவேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து..." (உபாகமம் 16:5,6) அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு நுழைந்தவுடன் அனைத்து இஸ்ரயேலர்களும் பஸ்கா ஆசரிப்பிற்காக கூடாரத்திற்கு அல்லது பின்னர் எருசலேமில் உள்ள ஆலயத்திற்குப் பயணிக்க வேண்டும். வீடுகளில் பஸ்கா அனுசரிப்புகள் இனி அனுமதிக்கப்படவில்லை.

கூடாரத்திற்கு பயணிகளின் பஸ்கா வருகை ஒரு தளவாட சிக்கலை உருவாக்கியது -சரியாக "இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்" ஜனங்கள் கூடாரத்திற்கு எப்படி வருவார்கள் ?அதற்கு பின் அவர்கள் எப்படி இராத்தங்குவார்கள் ? குறிப்பாக சிறு குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு இது எப்படி சாத்தியமாகும் ?ஆட்டுக்குட்டிகளை சில மணிநேரங்களுக்கு முன் கொல்வதன் மூலம் இந்த பிரச்சனை தீர்க்கப்பட்டது. (ஒரு சூரிய உதய நாள், பலி இன்னும் நிசான் 14 அன்று கணக்கிடப்படும் ) அந்த வகையில், பின்னர் அது நிஜமான ஆட்டுக்குட்டியின் பலி, இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியுடன் ஒத்திசைவாக்கப்பட்டது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே." (1கொரிந்தியர் 5:7)

## வெளியேற்றத்தின் திட்டம்

சூரிய உதயத்தில் தொடங்கும் வெளியேற்றத்தின் நாட்களின் விளைவுகளைப் பார்க்க, கீழே உள்ள அடையாளங்கள் பரிந்துரைக்கப்படுகிறது.

பிற்காலத்தில் நாளின் ஆரம்பம் சூரிய அஸ்தமன கணக்காக மாற்றப்பட்டிருந்தால், இயேசு கிறிஸ்து இறந்த அதே நேரத்தில் ஆட்டுக்குட்டிகள் கொல்லப்பட்டதற்கு அத்தகைய மாற்றம் பின்னர் வழி திறந்தது. நாளின் தொடக்கத்தைக் கணக்கிடுவதில் மாற்றம் கடினமானதாகத் தோன்றினால், ஏழாவது மாதத்தை முதல் மாதமாக மாற்றுவதற்காக நாட்காட்டி ஆண்டவரால் மாற்றப்பட்டது என்று கருதுங்கள் (யாத்திராகமம் 12:1,2) அதனால் இன்றும் யூத புதிய ஆண்டு ஏழாவது மாதத்தில் தொடங்குகிறது. அதேபோல, நித்திரையில் இருக்கும் பரிசுத்தவான்களை

எழுப்புவதற்கு கிறிஸ்துவின் வருகையில், தேவனுடைய இராஜ்யத்தின் பரலோக பாகத்தின் புதிய "நாள்" துவங்கிற்று. இது பூமிக்குரிய பகுதி தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தேவனுடைய இராஜ்யத்தின் பரலோக பகுதி தொடங்கிவிட்டது.

இன்றும் கூட நாட்காட்டியின் நிச்சயமற்ற தன்மையால் சிதறிய யூதர்கள் பஸ்கா பண்டிகையின் முதல் இரண்டு நாட்களில் இரண்டு பஸ்காக்களை கடைப்பிடிக்கிறார்கள். (நான்காம் நூற்றாண்டில் ஹில்லெல் II நாட்காட்டி தொடங்கியதிலிருந்து பாபிலோன் மற்றும் இஸ்ரயேலின் கிழக்கே உள்ள பிற நாடுகளில் அந்த நேரம் மிகவும் பொருத்தமானது)

சூரியன் மறையும் நாளாக மாறுகிறது.

**சூரிய அஸ்தமிக்கும் நாளாக மாறுகிறது**

சூரிய அஸ்தமனத்தின்படி நாளைக் கணக்கிடும் மாற்றத்தின் விளைவைக் காண, கீழே உள்ள வரைபடம் கிறிஸ்துவின் பலியின் ஆண்டிற்கு பரிந்துரைக்கப்படுகிறது. (கி.பி 33 ஏப்ரல்3) எகிப்தில் நிசான் 14 இரவுடன் தொடர்புப்படுத்தப்பட்ட பஸ்கா உணவு, இப்போது நிசான் 15 உடன் தொடர்புடையதானது. நிசான் 14 பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்படுவதை தொடர்ந்து செயலாக்க, நடுப் பிற்பகல் வரை அது தாமதிக்கப்பட்டது. 14 ம் தேதி நிறைவடையும் தருவாயில், அதாவது முக்கியமான பஸ்கா உணவிற்குச் சில மணிநேரங்களுக்கு முன் வரைக்கும். இந்த வழியில், எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டிகள் கொல்லப்பட்டு உண்ணப்பட்ட அதே நேரத்தில் 14 ஆம் தேதி கிறிஸ்து தனது நினைவுகூருதலை நிறுவியிருக்கக்கூடும். இந்த வழியில், இஸ்ரயேல் தற்போது நிழலான பஸ்கா

| யாத்திரை | 33AD பஸ்கா |
|---|---|
| **நிசான் 14** – பகல் / இரவு சூரிய மறைவுக்கு முன் புளிப்பை நீக்க மோசே மூப்பர்களுக்கு அறிவுறுத்துகிறார்.<br><br>ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதல்–மாலை 6.00 இருந்து 7.00 க்குள் உணவு தயாரித்து, அவசரமாக உண்ணப்படுதல் கடைசி வாதை, ஆனால் இஸ்ரயேலின் முதற்பேறானவரை கடந்து போதல். விடியும் வரை வீட்டில் இருத்தல். | 13 வியாழன் – பகல் சீடர்களை பஸ்காவிற்கு ஆயத்தமாக இயேசு கூறுகிறார்.<br><br>14 வெள்ளி – இரவு/ பகல் கடைசி இராப்போஜனம் நினைவுகூறுதல் நிறுவப்படுதல். கெத்செமனே, நியாயசங்கத்திற்கு முன் போலி விசாரனை. (பஸ்காவின் நாள், ஆனால் விருந்து இன்னும் தொடங்கவில்லை) |
| நிசான் 14 – பகல் / இரவு சூரிய மறைவுக்கு முன் புளிப்பை நீக்க மோசே மூப்பர்களுக்கு அறிவுறுத்துகிறார். | கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல் – காலை 11:30மணி, இறத்தல் மாலை – 2:30 மணி பஸ்கா அட்டுக்குட்டிகள் மாலை 2.30-3.00 இல் கொல்லப்பட்டன. சூரிய முறைவுக்கு முன் எல்லா புளிப்பையும் நீக்க வேண்டும் |
| நிசான் 15 – பகல் / இரவு பணம் பெற்று, விடியலில் எகிப்தை கொள்ளையடித்தல், சூரியன் உதித்தவுடன் எகிப்தை விட்டு விரைவில் வெறியேறுதல். பஸ்கா விருந்தின் முதல் பகல்.<br><br>சுக்கோத்தில் முகாமிடுதல், பஸ்கா விருந்தின் இரண்டாம் இரவு. | 15 சனிக்கிழமை–இரவு/பகல் இஸ்ரயேல் வழக்கமான பஸ்கா உணவை உண்கிறது. பஸ்கா விருந்தின் முதல் இரவு. பரிசுத்த சபைகூடுதல் தொடங்குகிறது.<br><br>பஸ்கா விருந்தின் முதல் பகல். |
| நிசான் 16 – பகல் / இரவு வனாந்தரத்தின் ஓரத்திற்கு பயணம்<br><br>ஏத்தாமில் முகாம்மிடுதல் | 16 ஞாயிறு – இரவு / பகல் பஸ்கா விருந்தின் இரண்டாம் இரவு.<br><br>கிறிஸ்து உயிர்த்தெழுகிறார் (சூரிய உதயத்திலிருந்து சில நிமிடங்களில் இருக்கலாம்). இஸ்ரயேல் முதற்பலனை படைக்கிறது (வாற்கோதுமை, சணல்) |
| நிசான் 17 – பகல்/இரவு திரும்பி (வடக்கிற்கு?) செல்லுதல் (DOUBT)<br><br>கோபுரங்களுக்கும் (DOUBT) வடக்கின் பாகால்செபோலுக்கும் இடையில் ஈரோத் பள்ளத்தாக்கில் முகாம்மிடுதல். | 17. திங்கள் – இரவு பஸ்கா விருந்தின் மூன்றாம் இரவு. |

### ஆறு சந்தர்ப்பங்கள்

# இஸ்ரயேலின் பஸ்காக் கொண்டாட்டங்கள்



Jeff Earl

"கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது, பலத்த கையினால் கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். ஆகையால், நீ வருஷந்தோறும் குறித்த காலத்தில் இந்த நியமத்தை ஆசரித்து வருவாயாக." (யாத்திராகமம் 13:9,10)

பஸ்கா மற்றும் அதன் எதிர்கால கொண்டாட்டங்களின் ஆறு குறிப்பிட்ட காரியங்களை பழைய ஏற்பாடு விவரிக்கிறது, மற்றவை சுருக்கமாக மட்டுமே குறிப்பிடுகிறது.

(1) எகிப்தில் சிறைபிடிக்கப்பட்டிருந்த இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைக் கடந்து செல்லுதல். அவர்கள் எகிப்திலிருந்து புறப்படுவதற்கு முன் ஆட்டுக்குட்டியைப் புசித்தபோது, பஸ்காவை நித்திய நியமமாக ஆசரிக்கும் கட்டளையைப் பெற்றனர். (யாத்திராகமம் 12ம் அதிகாரம்)

(2) மோசேயுடன் சீனாய் வனாந்திரத்தில் (எண்ணாகமம் 9ம் அதிகாரம்)

(3) யோசுவாவுடன் கில்காலில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடையும் போது. (யோசுவா 5ம் அதிகாரம்)

(4)யூதாவின் இராஜா எசேக்கியாவின் ஆட்சியின் போது (2நாளாகமம் 30 ம் அதிகாரம்)

(5)யோசியா இராஜாவின் ஆட்கியின் போது (2 நாளாகமம் 35ம் அதிகாரம்)

(6)பாபிலோனுக்கு சிறைப்பிடித்ததிலிருந்து எஸ்றா இஸ்ரயேலுக்குத் திரும்பி, சாலொமோன் ஆலயத்தை திரும்ப கட்டும் போது (எஸ்ரா 6ம் அதிகாரம்)

### எகிப்து மற்றும் வனாந்தரம்

முதல் பஸ்கா யாத்திராகமம் 12ல் விவரிக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த இதழில் உள்ள மற்ற கட்டுரைகளில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. சீன் வனாந்தரத்தில் இருக்கும்போது, இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு வருடமும் பஸ்காவைக் கொண்டாடினார்கள் என்று நாம் கருத வேண்டும். எண்ணாகமம் 9:1-5 ல் அதைப் பற்றிய இரண்டாவது குறிப்பு காணப்படுகிறது. "எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி - குறித்த காலத்தில் இஸ்ரயேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள். இந்த மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான (இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில்) குறித்த காலத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்..."

இருப்பினும், அந்த நாளில் பஸ்காவைக் கொண்டாட முடியாதபடி, பிரேதத்தினால் தீட்டுப்பட்டிருந்த மனிதர்கள் இருந்தனர். எண்ணாகமம் 9:10-11ல் கடவுள் மோசேக்கு இதை குறித்து அறிவுறுத்தினார். "... ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த் தூரம்போயிருந்தாலும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமாகிய வேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து..."

பஸ்காவை தவறவிட்டதற்கான தண்டனை கடுமையாக இருந்தது. "ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக்காதேபோனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான், அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான்." (வசனம் 13) "அவருடைய ஜனங்களிலிருந்து அறுப்புண்டுபோவான்" என்பது நாடுகடத்தப்படுவதைக் குறிக்கிறது என்று சிலர் கூறுகின்றனர்.

## யோசுவா மற்றும் வாக்களிக்கப்பட்ட தேசம்(DOUBT)



இஸ்ரயேலர்கள் தங்கள் தேசத்தில் குடியேறிய பிறகு, கர்த்தர் பஸ்கா அனுசரிப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அது இறுதியில் எருசலேமாக இருந்தது. "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன்னுடைய வாசல்களில் எதிலும் நீ பஸ்காவை அடிக்கவேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து.."(உபாகமம் 16:5,6)இங்கிருந்து இயேசுவின் நாள் வரையிலும், பண்டிகையைக் கடைப்பிடிக்க எருசலேமுக்குச் செல்ல வேண்டியதாக இருந்தது.

பஸ்காவை அனுசரிப்பதைப் பற்றிய மூன்றாவது குறிப்பிட்ட விளக்கம் யோசுவா 5ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வனாந்திரத்தில் பிறந்தவர்கள் விருத்தசேதனம் செய்யவில்லை. எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரயேலர் "கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிக் கொடுக்காததினால்" (வசனங்கள் 5-7) கானான் தேசத்திற்குச் செல்ல பயந்தபோது, அதன் மூலம் கடவுளை அவர்கள் நிராகரித்தார்கள். அவர்கள் அலைந்து திரிந்த வருடங்களின் முடிவில், "எகிப்தின் நிந்தையைப் புரட்டுவதற்காக" வனாந்தரத்தில் பிறந்த ஆண்களுக்கு விருத்தசேதனம் செய்யும்படி கடவுள் யோசுவாவுக்குக் கட்டளையிட்டார். (வசனம் 9) பின்னர், "இஸ்ரயேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள்" என்று 10ம் வசனம் கூறுகிறது. மேலும், "பஸ்காவின் மறுநாளாகிய அன்றையதினம் அவர்கள் தேசத்தினுடைய தானியத்தாலாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்ட கதிர்களையும் புசித்தார்கள்." (வசனம் 11) அவர்கள் கானான் தேசத்திலிருந்து சாப்பிட்ட மறுநாளே, கர்த்தரால் அளிக்கப்பட்ட மன்னா நின்று போயிற்று.

### யூதாவின் இரண்டு நல்ல இராஜாக்களின் அனுசரிப்புகள்

பஸ்காவின் மிக விரிவான விளக்கம், 2நாளாகமம் 30:1-30ல் காணப்படுகிறது. இது இருபத்தைந்து வயதான எசேக்கியா இராஜாவின் ஆட்சியின் போது அனுசரிக்கப்பட்டது. பொல்லாத இராஜாவாகிய ஆகாசின் குமாரனாக இருந்தாலும் எசேக்கியா யெகோவா தேவனை வழிபடுபவராக இருந்தார். ஒருவேளை எசேக்கியாவைப் பயிற்றுவிப்பதில், ஆகாசின் மனைவி அபியாவுக்கு, அரச குடும்பத்தைச் சேர்ந்த ஏசாயா தீர்க்கதரிசி, உதவியாக இருந்திருக்கலாம். பல தசாப்தங்களாக விக்கிரகாரதனைக்கு பிறகு யூதாவில் பொருத்தமான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த எசேக்கியா நன்கு ஆயத்தமாக இருந்தார். அவர் ஆலயத்தை மீண்டும் திறந்து, அதைச் சுத்தப்படுத்த லேவி கோத்திரத்தாரை நியமித்தார். எல்லா ஆசாரியர்களும் லேவியர்களும் தங்களைப் பரிசுத்தப்படுத்தும்படி கட்டளையிட்டார். முதலாவதாக, யூதாவுக்கு மட்டும் அல்ல "இஸ்ரயேலர்கள் அனைவருக்கும்" பாவநிவாரண பலியை அவர் கட்டளையிட்டார். பஸ்கா மீண்டும் துவங்கப்பட்டு முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எசேக்கியா கட்டளையிட்டார்.

இருப்பினும் யூதா முதலில் புளித்த மாவிலிருந்து விடுபட வேண்டியதாக இருந்தது. இராஜ்யத்தின் பத்து கோத்திரம் மற்றும் இரண்டு கோத்திரம் உட்பட , பஸ்காவைக் கொண்டாட எருசலேமில் உள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு



வரும்படி இஸ்ரயேல் அனைவருக்கும் எசேக்கியா இராஜா கடிதங்களை அனுப்பினார். இருப்பினும், எப்பிராயீம், மனாசே மற்றும் செபுலோன் நாட்டிற்கு அனுப்பப்பட்ட அஞ்சல்காரர்கள் "பரியாசம் செய்யப்பட்டு, இகழப்பட்டார்கள்" (வசனம் 10) ஒரு சிறிய குழு மட்டுமே எருசலேமுக்கு பயணிக்க ஆயத்தமாக இருந்தது.

எண்ணாகமம் **9:10-11**னின் வழிமுறைகளைப் பின்பற்றி, முதல் மாதத்திற்குப் பதிலாக இரண்டாம் மாதத்தில் பஸ்காவைக் கொண்டாட எசேக்கியா முடிவு செய்தார். பத்து கோத்திரத்தில் இருக்கும் பலர் முழுமையாக சுத்திகரிக்கப்படாதிருந்தும் பஸ்காவை புசித்தார்கள். எசேக்கியா அந்த ஜனங்களின் மன்னிப்புக்காக ஜெபித்தார், யெகோவா தேவன் அதற்கு செவிகொடுத்தார். "கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, ஜனங்களுக்கு அநுகூலஞ்செய்தார்." (வசனம் 20) இந்த கொண்டாட்டத்தின் போது பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. "தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரயேலுடைய இராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை." (வசனம்26)

**யோசியா இராஜாவின் பஸ்கா**

2நாளாகமம் 35ம் அதிகாரத்தில், யோசியா இராஜாவின் ஆட்சியின் 18 வது வருடத்தில் இந்த பஸ்கா நிகழ்ந்தது. இதற்கு முன்னதாக அவரது 12 வது வயதில் விக்கிரகாரதனைக்கு எதிரான தீவிர பிரச்சாரம் நடந்தது. அவர் பாகாலின் பலிபீடங்களை இடித்து, பலிபீடங்களின் மீது ஈனமான ஆசாரியர்களின் எலும்புகளை எரித்தார். சிலைகளை துாள் துாளாக இடித்து, அவைகளுக்கு பலியிட்டவர்களின் கல்லறைகள் மீது தூவினார். இவ்வாறு அவர் யூதா மற்றும் எருசலேமிலும், யூதாவின் வடக்கு மற்றும் தெற்கே உள்ள பட்டணங்களிலிருந்தும் விக்கரகாரதனையை அகற்றினார். (2நாளாகமம் 34:3-7) "அழிந்துபோக விடப்பட்ட" கர்த்தருடைய ஆலயத்தை "சீரமைப்பதற்கு பணம் சேகரிக்கப்பட்டது.

யோசியா தேசத்தைச் சுத்திகரித்த பிறகு, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா "கர்த்தருடைய ஆலயத்தில் நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் கண்டுபிடித்தார்." யோசியா அதைப் படித்து மிகவும் வேதனையடைந்து, தனது வஸ்திரங்களை கிழித்து கொண்டார். "கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதே போனபடியினால், நம்மேல் மூண்ட கர்த்தருடைய உக்கிரம் பெரியது என்றான்." (2நாளாகமம் 34:21) பின்னர் அவர் "கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய

கட்டளைகளையும் கைக் கொள்ளுவேன் என்று கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணினார்." (2நாளாகமம் 34 :31)

பதிவிட்டபடி, யோசியா இராஜாவின் இந்த பஸ்கா பண்டிகை அவருடைய கொள்ளு தாத்தா எசேக்கியா இராஜா நடத்தியதை விட மிக சிறப்பாக இருந்தது. "தீர்க்கதரிசியாகிய சாமுயேலின் நாள் தொடங்கி, இஸ்ரயேலில் அப்படிக் கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை, யோசியாவும், ஆசாரியரும்,லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரயேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப் போல இஸ்ரயேல் இராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை."(2நாளாகமம் 35: 18)

**பாபிலோன் சிறையிருப்பிலிருந்து**



**திரும்புதல்**

கடைசியாக பதிவு செய்யப்பட்ட பஸ்கா எஸ்றா 6:19-21 வில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தை மீண்டும் கட்டும்படி, இஸ்ரயேலர்கள் தேசத்திற்குத் திரும்புவதற்கும் கோரேஸ் இராஜாவின் ஆணை ஒப்புதல் அளித்தது. "சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்காவையும் ஆசரித்தார்கள். ஆசாரியரும் லேவியரும் ஒருமனப்பட்டுத் தங்களை சுத்தம்பண்ணிக்கொண்டதினால், எல்லாரும் சுத்தமாயிருந்து, சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லாருக்காகவும் ஆசாரியரான தங்கள் சகோதரருக்காகவும், தங்களுக்காகவும் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடித்தார்கள். அப்படியே சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த இஸ்ரயேல் புத்திரரும், இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரை நாடும்படி, பூலோக ஜாதிகளின் அசுத்தத்தை விட்டு, அவர்களண்டையிலே சேர்ந்து அனைவரும் அதைப் புசித்து...". "இஸ்ரயேல் அனைத்தின் பாவநிவாரணபலிக்காக (இஸ்ரயேல் கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே) பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் பலியிட்டு" என்று 17 ம் வசனம் கூறுகிறது. இப்படியாக இஸ்ரயேல் மீண்டும் ஒன்றுப்பட்டது. இஸ்ரயேல் புத்திரர், " இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரை நாடும்படி, பூலோக ஜாதிகளின் அசுத்தத்தை விட்டு,..." விலகினார்கள். (வசனம் 21)

**கிறிஸ்தவர்களுக்கு பஸ்காவின் முக்கியத்துவம்**

கிறிஸ்தவர்கள் பஸ்காவை நினைவுகூருவதற்கான காரணத்தை பவுல் 1கொரிந்தியர் 5:7 இல் கூறுகிறார். "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே." இங்கே விவாதிக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில், பஸ்கா அனுசரிப்புக்கு முன் விக்கிரகாரதனை தேசத்தை சுத்தப்படுத்துவது, ஆவிக்குரிய இஸ்ரயேல் உலக தாக்கங்களிலிருந்து தன்னைத் தூய்மைப்படுத்துவதற்கு ஒப்பிடலாம். எனவே , "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." (2கொரிந்தியர் 7:1)என்று பவுல் எழுதுகிறார். இஸ்ரயேலின் இரு வீடுகளையும் (யூதா மற்றும் முன்னாள் பத்து கோத்திரங்கள்) யோசியாவின் பஸ்காவின் சேர்ப்பது, நம் ஆண்டவரின் மரணத்தின் வருடாந்திர நினைவுகூருதலில் பங்கேற்க அனைத்து சகோதரர்களையும் சேர்த்துக்கொள்ள நம்மை ஊக்குவிக்க வேண்டும

## ஆட்டுக்குட்டி தேர்ந்தெடுத்தல்

# நிசான் 10



*David Rice*

""இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள்." (யாத்திராகமம் 12:3)

எல்லா கிறிஸ்தவர்களும் அறிந்திருக்கிறபடி, இயேசு "கடவுளின் ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29, 36) அவர் மனுக்குலத்தின் மீட்பர் என்று கடவுளால் முன்னறிவிக்கப்பட்டார். "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி.." (வெளிப்படுத்துதல் 13:8) ஆதாமுக்கு பின் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின் இயேசு மரித்தார். சில நேரங்களில் வேதாகமத்தில் ஒரு "நாள்" ஆயிரம் வருடங்களைக் குறிக்கிறது. (சங்கீதம் 90:4) இயேசு பூமிக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே மனுக்குலத்தின் மீட்பராக கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற உண்மை, நிசான் 10ம் தேதி அன்று பஸ்கா ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுப்பதில் பிரதிபலிக்கிறது. நடைமுறையில், சொல்லபோனால், பஸ்காவுக்கு முன்னதாக ஒரு மென்மையான ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுப்பது, அந்த குடும்பத்தினருக்கு மிகவும் நேசிக்கப்பட்ட ஒன்றாக அது இருக்கும். இயேசுவை அறிந்தவர்கள் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களிடம் அவர் அன்பாகவே இருந்தார், மேலும் அனைவரையும் மீட்பதற்காக அவரது மரணத்தை மிகவும் அதிர்ச்சிகரமானதாக ஆக்கினார்.

### மரியாளினால் அபிஷேகிக்கப்பட்ட இயேசு

இஸ்ரயேலில் பஸ்கா ஆட்டுக்குட்டியை பலியிடுவதற்கு குறிப்பிட்ட அதே நாளில், நிசான் 14 அன்று இயேசு இறந்தார் என்பது பொதுவாக அறியப்பட்டுள்ளது. இயேசுவும் ஒரு வெள்ளிக்கிழமையில் மரித்தார், நிசான் 14 வெள்ளிக்கிழமையில் வருவது வழக்கத்திற்கு மாறானது - இது கி. பி 33 ஆம் ஆண்டை இயேசுவின் மரண ஆண்டாக அடையாளப் படுத்துவதற்கான ஒரு வழியாகும்.

சுவிசேஷங்களில் "பஸ்கா" என்று அழைக்கப்படும் நாள் பொதுவாக 15ஆம் நாளைக் குறிக்கிறது. அன்று தான் 14ம் தேதி பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டிகளை இஸ்ரயேலர்கள் தங்கள் வீடுகளில் சாப்பிடுவார்கள். அதாவது 15 ஆம் நாள் மாலை ஆரம்பமாகும். "பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்" என்று யோவான் 12:1லி வாசிக்கிறோம். இது நிசான் 15க்கு ஆறு நாட்களுக்கு முன் நிசான் 9ம் தேதியைக் குறிக்கிறது. இருப்பினும் இயேசு வந்த அந்த நாளின் மாலை அல்லது முடிவில் நிசான் 10 ம் தேதியை அறிமுகப்படுத்தினார். "அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள், மாத்தாள் பணிவிடை செய்தாள் லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்." (யோவான் 12:2)

மரியாளும் மார்த்தாளும் பொதுவாக இயேசுவை வரவேற்று அவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் விருந்தோம்பல் செய்திருப்பார்கள். ஆனால் இன்னும் அதிகமாக, இந்த விஷயத்தில், சில மாதங்களுக்கு முன் இயேசு அவர்களின் சகோதரனை மரித்தோரிலிருந்து எழுப்பினார். மரியாளின் இருதயத்தில் மரியாளின் மனதில் பதிந்திருந்தது. அடுத்த வசனத்தை வாசிக்கையில், "அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள், அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது."(யோவான் 12:3)

இயேசுவுக்கு எவ்வளவு அருமையான





தருணம். மற்றவர்களை விட இன்னும் விலையேறபெற்ற காரியங்களை அவர் அறிந்திருந்தார். ஏனென்றால், இன்னும் சில நாட்களில் கல்வாரி சிலுவையில் தன் உயிரையே கொடுக்கபோகிறதை அவர் அறிந்திருந்தார். அப்பொழுது இயேசு - இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்." (யோவான் 12:7)

பஸ்கா ஆட்டுக்குட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதே நாளில், நிசான் 10 ம் தேதிஇயேசு இவ்வாறு அபிஷேகம் செய்யப்பட்டார் என்பதை ஆர்வத்துடன் நாம் கவனிக்கவேண்டும்.

### இயேசு எருசலேமுக்குள் பவனி வந்தார்

"மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு, ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள். "(யோவான் 12:12, 13) இங்கு "மறுநாளிலே" என்பது அடுத்த நாள் காலை என்று பொருள்படும், ஆனால் இது இன்னும் எண்ணிக்கையில் அதே நாள், நிசான் 10ம் தேதி ஆக இருந்தது. இப்படியாகவே, நிசான் 10 ம் தேதி, ஜனக் கூட்டம் இயேசுவை "இஸ்ரயேலின் இராஜா" என்று போற்றியது. ஒரு வகையில் இது ஒரு மாபெரும் வெற்றி நாளாக இருந்தது. இது இஸ்ரயேலர்களின் திரளான ஜனங்களின் குறிப்பிடத்தக்க பாராட்டாக இருந்தது. ஆனால் நிசான் 10ம் தேதி என்ற நாளின் அர்த்தத்தை இயேசு அறிந்திருந்தார். இவ்வாறு வெளிப்படையான வெற்றியும் துதியும் நிறைந்த இந்த நாளில், இயேசு தம் மனதில், மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்." (யோவான் 12:27)

சில வசனங்களுக்குப் பிறகு இயேசு இன்னும் வெளிப்படையாக பேசினார். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்." (யோவான் 12:32, 33)

ஓசன்னா என்ற வார்த்தை சில விஷயங்களில் தெளிவாக இல்லை. "ஓசன்னா என்பது யூத மதத்திலும் கிறிஸ்தவத்திலும் ஒரு வழிபாட்டு வார்த்தை, யூத மதத்தில் இது தெய்வீக உதவிக்கான வேண்டுகோளை வெளிப்படுத்தும் அழுகையைக் குறிக்கிறது' என்று விக்கிபீடியா கூறுகிறது. கிறிஸ்துவத்தில் இது புகழ்ச்சியின் கூக்குரலாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தையின், யூதர்கள் பயன்பாட்டில் கவனம் செலுத்துவது, தெய்வீக உதவிக்கான வேண்டுகோளுக்காக, அதன் அர்த்தத்தில் உட்பொதிக்கப்பட்டிருந்தால், அது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அவர்களுக்கும், அனைத்து மனுக்குலத்திற்கு தேவை - இயேசுவினால் கிடைக்கும் மீட்பு. அது நம் மீட்பராகக் கடவுளால் மட்டுமே வழங்கப்பட முடியும். ஓசன்னா என்ற வார்த்தை ஸ்ட்ராங்கின் 5614, "எபிரெய வம்சாவளியில்... ஓ இரட்சியும்" என்று பொருள்.

நிசான் 10 அன்று, மீட்புக்கு நியமிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான இயேசுவை, கூடியிருந்த இஸ்ரயேலர்களின் இந்தக் கோரிக்கைக்கு ஏற்றவாறு அனுப்பப்பட வேண்டும் என்று கடவுளின் செயல் எவ்வளவு பொருத்தமானது.

### யோசுவா யோர்தானை கடக்கிறார்

"இந்தப் பிரகாரமாக முதல் மாதம் பத்தாம் தேதியிலே ஜனங்கள் யோர்தானிலிருந்து கரையேறி, எரிகோவுக்குக் கீழெல்லையான கில்காலிலே பாளயமிறங்கினார்கள்." (யோசுவா4:19)

இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் 40 ஆண்டுகளாக அலைந்து திரிந்த காலம், சுவிசேஷ யுகத்தையும், அவர்கள் யோர்தானை கடப்பது இராஜ்யத்தின் துவக்கத்தையும் சித்தரிக்கிறது.

தண்ணீர் பிரிக்கப்பட்டதினால், ஜனங்கள் பாதுக்காப்பாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட

தேசத்திற்குள் செல்ல அனுமதித்தது. இது சாபம் "வறண்டு போவதையும்" இராஜ்யம் துவக்கத்தில் இருந்த நிலைமைக்கு திரும்புவதையும் சித்தரிக்கிறது. யோர்தான் எவ்வாறு நிறுத்தப்பட்டது என்பதை யோசுவா 3:16 விவரிக்கிறது. "மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர் வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது, உப்புக்கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று.அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்துபோனார்கள்." வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், ஒரு மலை சரிவில் இருந்து நிலம் சரிந்திருக்கவேண்டும், இதனால் நீர் ஓட்டம் நிறுத்தப்பட்டு, கீழ்நோக்கி இஸ்ரயேலர்கள் பாதுகாப்பாக கடக்க முடிந்திருக்கும்.

தண்ணீர் நிறுத்தப்பட்ட இடத்தைக் கவனிக்கவேண்டும் - "ஆதாம்" இயற்கையாகவே, மனுக்குலத்தின் மீது சுமத்தப்பட்ட சாபம் முதலில் ஆதாமின் மீறுதலில் இருந்து வந்தது என்பதை ஒருவர் நினைவில் கொள்ளவேண்டும், மேலும் இராஜ்யத்தின் தொடக்கத்தில் மீட்பின் இரத்தம் பயன்படுத்தப்படும் போது மனுக்குலத்தின் மீது சுமத்தப்பட்ட சாபம் நீக்கப்படும். சாபம் நீக்கப்படும் போது, மரித்தோரிலிருந்து முதலில் பூமிக்கு திரும்புவோர் முற்பிதாக்களே. இவர்கள் இஸ்ரயேலுக்கு திரும்புவார்கள் - குறைந்த பட்சம் அவர்களில் சிலர் - சகல ஜாதிகளும் இஸ்ரயேல் தேசத்திற்கு எதிராக கடைசி தாக்குதலின் மிகுந்த ஆபத்தான நேரத்தில் வருவார்கள். இதனுடன் தொடர்புடைய மீகா 5:5 அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. "இவரே சமாதான காரணர், அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போது, ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்."

இங்கு மேய்ப்பர்கள் என்ற சொல் இராஜாக்களுக்கு பயன்படுத்தப்படும் ஒரு மொழியாகும். ஒரு மேய்ப்பன் தனது மந்தையை ஆள்வது போல, ஒரு இராஜா தனது ஜனங்களை ஆள்கிறார். ஏழு என்ற எண்ணிக்கையில் இருக்கும் இந்த இராஜாக்கள், சுவிசேஷ யுகத்தின் ஏழு காலகட்டங்களில் உருவாக்கப்பட்ட சபையுடன் தொடர்புப்படுத்தலாம். எட்டு பிரபுக்கள் தகுதிப்பெற்ற முற்பிதாக்களை அடையாளப்படுத்துகிறார், அவர்கள் "பூமி எங்கும் பிரபுக்களாக" ஆக்கப்படுவார்கள். (சங்கீதம் 45:16) சபையின் ஏழு நிலைகளைத் தொடர்ந்து, இராஜ்யத்தின் தொடக்கத்தில் அவர்கள் தோன்றுவதால், ஒருவேளை அவர்கள் எட்டு (ஒரு புதிய துவக்கம்)எண்களாக இருக்கலாம்.

அந்த யுகத்தின் தொடக்கத்தில் இஸ்ரயேலர் தங்கள் எதிரிகளிடமிருந்து விடுவிக்கப்படும் போது, முற்பிதாக்கள் இஸ்ரயேலின் கவனத்தை தங்கள் மேசியாவான இயேசுவிடம் திரும்புவார்கள். அதே நேரத்தைப் பற்றி சகரியா 12:9,10பேசுகையில், கடவுள் இஸ்ரயேலை விடுவித்ததன் விளைவாக, அவர்கள் தங்கள் உண்மையான மேசியாவான இயேசுவை அடையாளம் காணத் தொடங்குவார்கள் என்பதைக் காட்டுகிறது. "அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன். நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்."

இவ்வாறு, ஆதாமின் சாபத்தை நீக்குதல் (யோர்தானை உலர்த்துதல்) மற்றும் இஸ்ரயேலுக்கு ஆலோசனை வழங்க முற்பிதாக்கள் திரும்புதல் அனைத்தும், இஸ்ரயேல் மேசியாவை அடையாளம் காணத் தொடங்கும் நேரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நிசான் 10 ம் தேதி இஸ்ரயேல் யோர்தானை கடந்தார்கள், நியாயப்பிரமாணத்தின் கீழ் அதே நாளில் அவர்கள் தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை தேர்வு செய்யவேண்டும். இது துல்லியமாக கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகிறது. இதற்கான மற்றொரு இணைப்பும் உள்ளது. யோர்தான் ஜலம் சார்தானுக்கடுத்த ஆதாம் என்ற இடத்தில் நிறுத்தப்பட்டது. "சார்தான்" என்பதற்கு "குத்தப்பட்டது" என்று பொருள். இது சகரியா 12:10 உடன் தொடர்புடையதாக உள்ளது. இஸ்ரயேலர்கள் "தாங்கள் குத்திய என்னை நோக்கி" பார்க்கும் போது. சிலுவையில் மரித்த இயேசுவை இஸ்ரயேல் பார்க்கும் போது, இது யோசுவாவில் நிசான் 10 அன்று யோர்தானைக் கடப்பதுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுவே தேசமாகிய இஸ்ரயேல் மனந்திரும்புதலின் தொடக்கமாக இருக்கும்.இந்த மனந்திரும்புதலின் ஆழத்தை சகரியா12:10-14 வெளிப்படுத்துகிறது. 2000 ஆண்டுகளாக அவர்களின் எதிர்மாறான பஸ்கா

ஆட்டுக்குட்டியைப் பாராட்டத் தவறியதால்,அவர்களின் வருத்தம் ஆழமாக இருக்கும். குறிப்பாக இஸ்ரயேலை அவர்களின் நெருக்கடியிலிருந்து காப்பாற்ற இயேசு தலையிடும்போது அவர்களின் துக்கம் அதிகரிக்கும். இது சிறிது நேரத்திற்கு அவசியமாக இருக்கும். மேலும் இஸ்ரயேலின் விசுவாசத்தின் ஆழமாக மறுக்கட்டமைப்பை இது உள்ளடக்கியுள்ளது.

யோசுவா 5:2-6 வில்,இந்த விரிவான தேசிய மனந்திரும்புதலை இஸ்ரயேல் ஆண்கள் விருத்தசேதனம் செய்வதால் அடையாளப்படுத்தப்படுகிறது. இது முந்தைய 40 ஆண்டுகளில் அவர்கள் கடைப்பிடிக்காத ஒரு நடைமுறையாகும். எரேமியாவின் அறிவுறுத்தலின் படி, "யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்." (எரேமியா4:4) அதன்பிறகு, அந்த மாதத்தின் 14ம் தேதி, யோசுவாவின் தலைமையின் கீழ் இருந்த இஸ்ரயேலர் முழுமையாக பஸ்கா ஆசரித்தார்கள். "இஸ்ரயேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள்." (யோசுவா 5:10)

## ஆறு மாதங்கள் கழித்து

நியாயப்பிரமாணத்தின் அடையாளங்கள் மற்றும் சித்திரங்களில், வசந்த காலம் பெரும்பாலும் சுவிசேஷ யுகத்திற்கும், இலையுதிர் காலம் சில சமயங்களில் ஆயிரமாண்டு யுகத்திற்கும் பொருத்தாக இருக்கும்.

ஆண்டின் வசந்த காலத்தில், பஸ்கா காலம் நிசான் 10 இல் தொடங்கியது, ஆட்டுக்குட்டிகள் நிசான் 14 அன்று பலியிடப்பட்டது, மேலும் ஏழு நாள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை 15 முதல் 21 நாட்கள் வரை அனுசரிக்கப்பட்டது. அந்த ஏழு நாட்கள் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படும், இதில் நாம் முடிந்தவரை பாவம் என்ற புளித்த மாவை நீக்குவதற்கான நம்முடைய முயற்சியையும் குறிக்கும்.

ஆண்டின் இலையுதிர் காலத்தில் 10 வது நாளில் ஒரு சிறப்பு நிகழ்வு இருந்தது, இது திஷ்ரி 10 ம் தேதி. இன்றுவரை யூத நாட்காட்டியில் மிகவும்



பரிசுத்தமான நேரமாக இந்த பாவநிவாரண நாள் இருக்கிறது. பாவநிவாரண நாளில் இரண்டு பாவநிவாரண பலிகள் செலுத்தப்பட்டது. ஆசாரியர்களுக்கு ஒரு காளையும், ஜனங்களுக்காக ஒரு வெள்ளாடும் பலி செலுத்தப்பட்டது. இருப்பினும் அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் பாவநிவாரண பலி செலுத்தப்படுவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. {எனவே, எசேக்கியேலில் ஆயிர வருட அரசாட்சியைப் பற்றி ஒன்பது அதிகாரங்கள் தொடங்குகிறது. அந்த தீர்க்கதரிசனத்தின் தேதியானது, புதிய வருடத்தைத் துவக்கும் மாதத்தின் 10 ம் நாள், அதாவது திஷ்ரி 10, இது பாவநிவாரண நாளாக இருந்தது.}

இந்த விஷயத்தில் திஷ்ரி 14 அன்று எந்த பலிகளும் இல்லை, ஆனால் திஷ்ரி 15 முதல் 21 வரை ஏழு நாள் கூடார பண்டிகை இருந்தது, இது 22 நாள் அன்று ஒரு சிறப்பு நாளாக முடிவடைந்தது. ஏழு நாள் கூடார பண்டிகை தேவனுடைய இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கான காலத்திற்கு பொருந்தக்கூடியதாக உள்ளது. (சகரியா 14:16)

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் விசேஷ நாள் 10. பத்து என்பது பூமிக்குரிய எண்ணாக இருப்பதினால் இயேசு மனுக்குலத்தை மீட்க வந்தார் என்பதை நமக்கு நினைப்பூட்டுவதாக இருக்கலாம். சுவிசேஷ யுகத்தில், பரலோக மகிமைக்கு கிறிஸ்துவோடு பங்காளிகளாவதற்கு மனுக்குலத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களுக்கு முதலில் மீட்பு பயன்படுத்தப்படுகிறது. அதன்பிறகு, இராஜ்யத்தில் நித்திய ஜீவனுக்கும் பூமியின் ஆசீர்வாதத்துக்கும் அழைக்கப்பட்ட மனுக்குலத்திற்கு மீட்புப் பயன்படுத்தப்படும்.

## திறக்கப்பட்ட ஒரு கல்லறை

# இயேசுவின் உயிர்த்தெழுதல்



Ernie Kuenzli

"அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்."(மத்தேயு28:2)

வாரத்தின் முதல் நாளை நோக்கி விடியத் தொடங்கும் முன், "பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். "(மத்தேயு 28:2-4) இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்ப கடவுள் கல்லை புறட்ட வேண்டிய அவசியமல்லை என்றாலும், அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை அவருடைய சீஷர்களுக்கு நிரூபிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. மேலும் சீஷர்கள் கல்லறைக்கு தடையின்றி செல்வதற்கு, காவலர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறவும் வேண்டும்.

இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி அறிந்த முதல் மனிதர்கள் கல்லறையைக் காத்தவர்கள். காவலர்கள் தூதனைப் பார்த்தார்கள், கல் உருண்டு விழுந்தது மற்றும் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. கடவுள் காவலர்களுக்கு இரண்டு சாட்சிகளை வழங்கினார். அவர்கள் பார்த்தது, அவர்கள் உணர்ந்தது. அவர்கள் மயங்கி விழும் அளவுக்கு வல்லமை அதிகமாக இருந்தது, பின்னர் அவர்கள் ஓடிப்போய், "நடந்த அனைத்தையும் பிரதான ஆசாரியர்களிடம் தெரிவித்தனர். "காவல் சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். " (மத்தேயு28:11) இயேசு யார் என்பதை உணர்ந்து அவரை ஏற்றுக்கொள்ள கடவுள் யூத மத தலைவர்களுக்கு ஒரு கடைசி வாய்ப்பைக் கொடுத்தார்.

நேரில் கண்ட சாட்சிகளுக்கு யூத தலைவர்கள் எவ்வாறு பதிலளித்தார்கள் ? "இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள் என்றார்கள்." (மத்தேயு 28:12-13) இங்கு யூதத் தலைவர்களின் நேர்மையற்ற தன்மையையும் கடின மனப்பான்மையையும் காண்கிறோம். இரண்டு முறை, இயேசுவோடு சம்மந்தப்பட்ட மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் நடந்தது - ஒன்று லாசரு மற்றும் இப்போது இயேசுவே. ஆனாலும் யூதத் தலைவர்கள் நம்பவில்லை.

இந்த நிராகரிப்பு ஐசுவரியவான் மற்றும் லாசருவின் உவமையில், ஆபிரகாமின் அறிவிப்பில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டது. "ஆபிரகாம் அவனை நோக்கி - அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன் அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன் - அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார். "(லூக்கா16:29-31)

காவலர்கள் சிலரின் ஊழலையும் பார்க்கிறோம். "அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது. " (மத்தேயு 28:15) அவர்கள் பணத்திற்காக கண்ணால் கண்டதையும் மறைத்து பொய் சொன்னார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி சீஷர்கள் பிரசங்கித்தவற்றுடன் அவர்கள் சொல்லுவதை



சேர்த்திருந்தால், விஷயங்கள் எப்படி வித்தியாசமாக



இருந்திருக்கும் என்று சிந்தித்து பாருங்கள்.

## கல்லறைக்கு சென்றனர்

"ஓய்வு நாளானபின்பு மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்தவர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக்கொண்டு. வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து, கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்." (மாற்கு 16:1-3)

இயேசுவின் ஊழியத்தின் போது அவரைப் பின் தொடர்ந்த ஸ்திரீகள், அவரது உடலை அடக்கம் செய்வதற்கான ஆயத்தத்தை முடிக்க அவரது கல்லறைக்குச் சென்றனர். ஏனெனில் இயேசு மரித்தவுடன் மிக அவசரமாக அடக்கம் செய்யப்பட்டதினால் இவைகள் அவருக்கு செய்யப்படவில்லை. பிலாத்து அரிமத்தியாவைச் சேர்ந்த யோசேப்புக்கு இயேசுவின் உடலை அடக்கம் பண்ண அனுமதி அளித்தார். "அவன் போய், மெல்லிய துப்பட்டியை வாங்கிக்கொண்டுவந்து, அவரை இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்தான்." (மாற்கு 15:46) இயேசுவின் உடல் வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்யப்படவில்லை. எனவே, ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஸ்திரீகள் தாங்கள் நேசித்த எஜமானரின் அன்பின் இறுதிச் செயலாக, தங்கள் சுகந்தவர்க்க தயாரிப்பை முடிக்கவந்தனர்.

அன்று காலையில் கல்லறைக்குச் சென்ற இந்த ஸ்திரீகள், கலிலேயாவில் இருந்து எருசலேமுக்கு இயேசுவைப் பின்பற்றினார்கள் அதன் பின் சிலுவையை நோக்கிக்கொண்டிருந்தார்கள். "சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்த போது அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருடனேகூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள். " (மாற்கு 15:40-41)கடவுளுடைய இராஜ்யத்தைப் பற்றிப் பிரசங்கித்துக் கொண்டு கலிலேயாவைச் சுற்றி வந்த இயேசுவைப் பின்பற்றினார்கள். "பின்பு, அவர் பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய இராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்." (லூக்கா 8:1-3)

ஓரளவு ஐசுவரியமுள்ள இந்த ஸ்திரீகள், இயேசுவின் ஊழியத்திற்குத் தங்கள் நிதியைப் பயன்படுத்தினார்கள். இயேசு அவர்களை தீய ஆவிகள் மற்றும் வியாதிகளிலிருந்து குணப்படுத்தினார், எனவே அவர்கள் இயேசுவுக்கு கடன்பட்டிருந்தார்கள். வேதாகமம் நான்கு ஸ்திரீகளின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. கலிலேயா பகுதியில் உள்ள மகதலேனா மரியாள் ஐந்து முறை குறிப்பிடப்படுகிறார். (மத்தேயு27:56, 28:1, மாற்கு16:1, லூக்கா24:10, யோவான் 20:1) அவள் ஏழு பிசாசுகள் நீங்கி குணமடைந்தவள். இயேசுவின் மீது அவளுடைய இருதயத்தில் நிறைந்திருக்கும் அன்பை நினைத்துப்பாருங்கள்.

அடுத்து வரும் மரியாள், யோசே மற்றும் யாக்கோபின் தாய் (சிறிய யாக்கோபு, அப்போஸ்தலர்களில் ஒருவர்) அவள் மூன்று முறை குறிப்பிடப்படுகிறாள். (மத்தேயு28:1, மாற்கு16:1, லூக்கா24:10) ஏரோதின் காரியதரிசியான கூசாவின் மனைவி யோவன்னாள் ஒரு முறை குறிப்பிடப்படுகிறாள். (லூக்கா24:10) கடைசியாக யாக்கோபு மற்றும் யோவானின் தாயான சலோமி,

மாற்கு 16:1 ல் குறிப்பிடப்படுகிறாள். இவள் மற்ற ஸ்திரீகளோடு தூரத்தில் நின்று இயேசுவை பார்த்துகொண்டிருந்தாள். (மத்தேயு27:56)

இந்த நால்வரும் இயேசுவின் மீது மிகுந்த அன்பைக் கொண்டிருந்தனர், மேலும் அந்த அன்பின் கடைசி வெளிப்பாட்டைக் காண்பிக்க விரும்பினர். ஒருவேளை இயேசுவின் உயிர்த்தெழுதல் அவர்களுக்கு முதலில் வெளிப்படுத்தப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

## எதிர்ப்பார்ப்புகள்

இந்த நேரத்தில் அவர்கள் என்ன நினைத்தார்கள், என்ன உணர்ந்தார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளலாம். அவர்கள் நிலைகுலைந்து போனார்கள். அவர்கள் மீது வந்த நம்பிக்கையின்மையை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. கல்வாரியிலிருந்து இயேசு அவர்களுக்குத் தோன்றும் வரையிலான மணிநேரங்கள் அவர்களின் முழு வாழ்க்கையிலும் மிக நீண்டதும், கடினமான மற்றும் மிகவும் துக்ககரமானதாக இருந்திருக்கவேண்டும். அவர்களின் ஆண்டவரும் ஆசிரியரும் கடவுளின் மகனுமான கிறிஸ்து கொல்லப்பட்டார். இந்த எருசலேம் வருகைக்கான அவர்களின் நம்பிக்கை நம்பமுடியாத அளவிற்கு அதிகமாக இருந்தது. "அவரே இஸ்ரயேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது." (லூக்கா24:21)

கடந்த வாரம் எருசலேமில் நடந்த நிகழ்வுகள்



அந்த எதிர்ப்பார்ப்புகளை ஆதரிப்பதாகத் தோன்றியது. எருசலேமுக்குள் வெற்றிகரமான நுழைவு, ஜனங்கள் அவரை மேசியா என்று அறிவித்தது, இந்த எதிர்ப்பார்ப்புகளை உயர்த்த உதவியது. "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். " (லூக்கா 19:38) இயேசு தனது தந்தையின் சார்பாக ஆலயத்தைச் சுத்தப்படுத்தியது இந்த எதிர்பார்ப்பை வலுப்படுத்தியது. (லூக்கா19:45-46)

யூத தலைவர்களுடனான ஒவ்வொரு மோதலிலும் இயேசு வெற்றி பெற்றார். அவரது பதில்களும் கேள்விகளும் அவர்களை மௌனத்தில் தள்ளியது. "அதன்பின்பு அவர்கள் அவரிடத்தில் வேறொன்றுங் கேட்கத் துணியவில்லை." (லூக்கா20:40) மூன்றரை ஆண்டுகளாக இயேசுவை எதிர்த்து நிற்கவோ, அவருடைய ஞானம் மற்றும் அவரது வல்லமை எதிர்க்க எதுவும் இல்லை - யூத தலைவர்களோ, இயற்கையோ, பிசாசுகளோ, கல்லறையின் வல்லமையோ எதுவும் அவரை எதிர்க்க முடியவில்லை. இதற்கிடையில், சீஷர்கள் தங்கள் சொந்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தனர். "அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி , இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான். அதற்கு இயேசு - மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு19:27,28) இப்போது, இந்த அனைத்து நம்பிக்கைளும் சிதைந்து போனது.

ஆயினும்கூட அந்த ஸ்திரீகள் கல்லை எப்படி புரட்டுவது என்று தெரியாமல், தங்கள் பணியைத் தொடர்ந்தனர். இதை குறித்து சகோ. ரசல் எழுதும் போது - "அவர்களின் ஆர்வத்தில்... கல்லின் பெரும் தடையை அவர்கள் மறந்துவிட்டார்கள்.... ஆனால் அவர்கள் கொண்டிருந்த பக்தியின் தூபம் பரலோகத்திற்கு எழுந்தது. மேலும் தடையை நகர்த்த கடவுள் தனது தூதரை மீண்டும் அனுப்பினார். (Reprint 1816)

"வாரத்தின் முதல் நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள்

கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கக்கண்டாள். உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு



அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய் - கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள். (யோவான் 20:1-2) வேதத்தின் அடிப்படையில், பெண்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வரவில்லை என்று சகோ. ரசல் கூறுகிறார். மகதலேனா மரியாள் முதலில் வந்தாள், கல் புரட்டப்படிருப்பதைக் கண்டு பேதுரு மற்றும் யோவானிடம் சொல்ல ஓடினாள். இந்த கட்டத்தில் அவள் தேவ தூதனைப் பார்க்கவில்லை.

## பேதுரு மற்றும் யோவான்

"அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். பேதுருவைப்பார்க்கிலும் மற்ற சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து, அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான், ஆனாலும்அவன் உள்ளே போகவில்லை." (யோவான் 20:3-5) யோவான் முதலில் கல்லறைக்கு வந்தார், அது காலியாக இருப்பதைக் கண்டார், ஆனால் உள்ளே செல்லவில்லை.

"சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான். " மரியாள் சொன்னது போல இயேசுவின் சரீரம் அங்கு இல்லை என்பதை பேதுரு கண்டுபிடித்தார். தலையில் சுற்றியிருந்த சீலை தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருந்ததினால் அது மீண்டும் தேவைப்படாது என்று காட்டியது. (யோவான் 20:6-8)

சீஷர்கள் எதை நம்பினார்கள் ? இயேசுவின் சரீரம் மட்டும் போய்விட்டது என்றா ? "அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள். (யோவான் 20:9-10) பேதுருவும் யோவானும் கல்லறையை விட்டு வெளியேறிய பிறகு மற்ற பெண்கள் வந்தனர். அவர்களும் கல்லறை காலியாக இருப்பதைக் கண்டனர். "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு, உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்..." (லூக்கா24:1-3)

அவர்கள் மரியாளைப் போலல்லாமல், கல்லறைக்குள் நுழைந்தனர் - ஆனால் மரியாளைப் போல அவர்கள் இயேசுவின் சரீரத்தைக் கண்டுபிடிக்கவில்லை. "அதைக் குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி - நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி - உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன ? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள்." (லூக்கா24:4-7)

இந்த நாளில் முதல் முறையாக, இயேசுவின்உண்மையான உயிர்த்தெழுதலைப் பற்றிய செய்தி - பெண்களிடம் பேசப்படுகிறது. மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுவார் என்ற இயேசுவின் வார்த்தைகளை தேவதூதர்கள் அவர்களுக்கு

நினைவுபடுத்தினார்கள். கல்லறையை விட்டுத் திரும்பிப்போய், இந்தச் சங்கதிகளெல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள். (லூக்கா24:8-9)

மற்ற ஸ்திரீகள் கல்லறையை விட்டு வெளியேறிய பிறகு என்ன நடந்தது என்பதை மத்தேயு கூறுகிறார். "அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்." இப்போது இயேசு உயிருடன் இருக்கிறார் என்பதை அறிந்து அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். "அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது,இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு - வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்." அவர்கள் இயேசுவை விட்டுவிட விரும்பவில்லை." அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி - பயப்படாதிருங்கள், நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப்போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்,அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்."(மத்தேயு 28:8-10) இப்போது உயிர்த்தெழுந்த ஆண்டவரை ஸ்திரீகளேப் பார்த்து, இயேசுவின் உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தினார்கள்.

மற்ற ஸ்திரீகள் பேதுருவும் யோவானும் வந்து சென்றபின் மகதலேனா மரியாள் கல்லறைக்குத் திரும்பினாள். "மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்,"என்ன நடந்தது என்று இன்னும் மரியாள் அறியாதிருந்தாள் "அப்படி அழுது கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடைதரித்தவர்களாய் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி - ஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள் என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்,அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்."(யோவான் 20:11-13) இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை மரியாள் இன்னும் அறியவில்லை, மரியாளின் கேள்விக்கு தேவதூதர்கள் பதிலளிக்கவில்லை. ஏனெனில் அவளுக்கு பதில் அளிப்பதற்கு ஒருவர் அவள் பின்னால் நின்று கொண்டிருந்தார்.

"இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள், ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து, ஸ்திரீயே ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள் அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி - ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும் நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்." அவள் இன்னும் இயேசுவை அடையாளம் காணவில்லை." இயேசு அவளை நோக்கி - மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து - ரபூனி என்றாள், அதற்குப்போதகரே என்று அர்த்தமாம்."

இயேசு அவளை வெறுமனே மரியாளே என்று அழைத்தார், உடனடியாக இவர் தான் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த உயிருள்ள இயேசு என்பது அவளுக்கு தெளிவானது. "அவளுடைய பெயரைக் கொண்டு பழைய பழக்கமான குரலில் அவர் அவளை அழைத்ததினால்" அவர் யார் என்பதை வெளிப்படுத்தியது" என்று சகோ. ரசல் (Reprint 3564)ல் பரிந்துரைக்கிறார். பல சமயங்களில், பல வருடங்கள் இல்லாத ஒருவரை, பழகிய சொற்றொடரைச் சொல்லுவதன் மூலம் நாம் அடையாளம் காண முடியும். மிகுந்த மகிழ்ச்சியில், மரியாள்இயேசுவை விட விரும்பாமல் அவரை பிடித்து கொண்டாள்.

"இயேசு அவளை நோக்கி - என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கும் ஏறிப்போகவில்லை, நீ என் சகோதரரிடத்திற்குப் போய்,நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்." இயேசுவைப் பற்றிக்கொள்ள விரும்பியதற்காக மரியாளைக் குறை கூற முடியுமா ? அவள் அவரை போகவிட விரும்பவில்லை, ஆனால் அவள் இயேசுவின் கட்டளைகளைப் பின்பற்றி, நடந்ததைச் சொல்ல சீஷர்களிடம் சென்றாள். "மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும் அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள். "(யோவான் 20:17,18) இயேசு உயிருடன் இருக்கிறார் என்று சீஷர்களிடம் சொல்ல மரியாள் ஓடியபோது மரியாளின் இருதயத்தை நிறைப்பிய மகிழ்ச்சியை நம்மால் கற்பனை செய்ய முடிகிறதா ?


## ஏன் ஸ்திரீகளுக்கு முதலில் காட்சி கொடுக்கப்பட்டது

இயேசு ஏன் ஸ்திரீகளுக்கு முதலில் தோன்றினார் என்று (Reprint 2802)ல் ரசல் கூறுகிறார். புருஷர்களை விட ஸ்திரீகளால் விசுவாசத்தை எளிதில் செயல்படுத்த முடியும் என்று தோன்றுகிறது, ஆகவே நம் ஆண்டவர் முதலில் மரியாளுக்குத் தோன்றினார், மேலும் நாம் பார்த்தபடி அவர் மூலம் மற்றவர்களின் இருதயங்களைத் தயார்படுத்தினார்.......எவ்வாறாயினும், மாலையில் மேல் அறையில் நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய முதல் வெளிப்பாடாகவும் தகவலாகவும் இருந்தது. அப்போது உருவாக்கப்படவேண்டிய விசுவாசமும் மகிழ்ச்சியும் உடனே நிகழ்ந்திருக்காது. ஆச்சரியமும், திகைப்பும் அதற்கான காரணங்களும் அந்த நாள் முழுவதிலும் அவர்களிடம் காணப்பட்டிருக்கும். மேலும் நம்முடைய ஆண்டவர் தனது கைகளையும் விலாவையும் காட்டிய நேரத்தில் அந்த உச்சக்கட்டமான ஆதாரத்தினால் உறுதியானது. "

மரியாள் மற்றும் பெண்களின் அறிக்கைகளுக்கு சீஷர்கள் எவ்வாறு பதிலளித்தார்கள்



?"கல்லறையை விட்டுத் திரும்பிப்போய், இந்தச் சங்கதிகளெல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள். இவைகளை அப்போஸ்தலருக்குச் சென்னார்கள் மகதலேனா மரியாளும் யோவன்னாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும், இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே. இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்சாகத் தோன்றினதினால் அவர்கள் இவர்களை நம்பவில்லை. " (லூக்கா 24:9-11) மற்ற சீஷர்கள் ஏன் நம்பவில்லை என்பதை Reprint 5415 ல் சகோதரர் ரசல் பரிந்துரைக்கிறார்.



"இயேசுவின் சீஷர்கள் திகைத்து, குழப்பமடைந்தனர். அவர் சிலுவையில் அறையப்படுவார் என்றும், மரித்தோரிலிருந்து முன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்படுவார் என்றும் அவர் அவர்களிடம் கூறியிருந்தாலும் அவர்கள் அந்த போதனையைப் புரிந்துகொள்ளவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றி கேள்விப்பட்ட பிறகும், அவர் முன்பு சொன்னவற்றுடன் இணைத்து பார்ப்பதில் அவர்கள் மிகவும் தாமதித்ததாக தெரிகிறது. "

## எம்மாவுக்கு செல்லும் வழியில்

இதை தொடர்ந்து, இரண்டு சீஷர்கள் எம்மாவுக்குப் புறப்பட்டார்கள். ஒருவர் கிலெயோப்பா மற்றவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. "அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள். இப்படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இயேசுதாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி - நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார்." (லூக்கா 24:13, 15, 16, 17) இயேசு ஒரு மனுஷனாகத் தோன்றினார், ஆனால் மரியாளைப் போலவே, சீஷர்களும் அவரை அடையாளம் காணவில்லை.

"அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக - இந்நாட்களில்

எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான். அவர் - எவைகள் என்றார் - அதற்கு அவர்கள் - நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே, அவர் தேவனுக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள்." (லூக்கா24:18-20) பின்னர் கிலெயோப்பா அவர்களின் உண்மையான ஏமாற்றத்தைக் குறிப்பிட்டார். "அவரே இஸ்ரயேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது." (லூக்கா 24:21) அடுத்து, கிலெயோப்பா அன்றைய நிகழ்வுகளை விவரித்தார். "ஆனாலும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப்போய், அவருடைய சரீரத்தைக் காணாமல், திரும்பிவந்து, அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களை பிரமிக்கப்பண்ணினார்கள். அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப் போய், ஸ்திரீகள் சொன்னபடியே கண்டார்கள், அவரையோ காணவில்லை என்றார்கள்." (லூக்கா24:22-24) ஸ்திரீகளின் அறிக்கைகளை சரிப்பார்க்க சீஷர்கள் கல்லறைக்குச் சென்றிருந்தார்கள், ஆனால் அவர்கள் ஆண்டவரை காணவில்லை, அதனால் அவர்கள் இன்னும் நம்பவில்லை. "அப்பொழுது அவர் (இயேசு) அவர்களை நோக்கி - தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி...(லூக்கா 24:25-26) அவர்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நம்பாததற்காக அவர்களை இயேசு கடிந்துகொண்டார். மேலும், பல ஸ்திரீகளின் சாட்சிகளையும் அவர்கள் நம்பாததினால் அவர்களை கடிந்து கொண்டிருக்கக் கூடும். "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்." (லூக்கா 24:27)

இயேசு எதைக் குறிப்பிட்டு காண்பித்தார் என்று நமக்குச் சொல்லப்படவில்லை, ஆனால் நாம் சில நியாயமான காரியங்களை யூகிக்கலாம்.

(1) மோரியா மலையில் ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்டது, கவுள் இயேசுவைக் பலியாகக் கொடுத்ததையும், ஆபிரகாமின் உடன்படிக்கையின் உறுதியான நிறைவேற்றத்தையும் சித்தரித்தது.

(2) எகிப்தில் பாஸ்கா ஆட்டுக்குட்டியைக் கொல்வது எப்படி அவருடைய சொந்த மரணத்தை அடையாளப்படுத்தியது மற்றும் சபை, மாம்ச இஸ்ரயேல் மற்றும் அனைத்து மனுக்குலத்தின் விடுதலைக்கு வழிவகுக்கும்.

(3) ஏசாயா 53ம் அதிகாரம் அவருடைய பூமிக்குரிய பலியை விவரித்த விதம்.

அவர்கள் தங்களுடைய இலக்கை அடைந்ததும், இயேசு தொடர்ந்து நடந்தார். "அவர்கள் அவரை நோக்கி - நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரைவருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார். அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து,

அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்." (லூக்கா24:29-31) இயேசு மறைந்து போன பின், "அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி - வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபோது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டார்கள்." (லூக்கா24:32) மற்றவர்களைச் சந்தித்து தாங்கள் கண்டதையும் கேட்டதையும் தெரிவிக்க அவர்கள் எருசலேமுக்கு விரைந்தனர்.

### தனிப்பட்ட முறையில் பேதுரு

இந்த நாளில் பேதுருவுக்கு மட்டும் இயேசுவின் காட்சி நான்காவது முறையாக இருந்தது என்று வேதாகமம் கூறுகிறது. எம்மாவிலிருந்து திரும்பி இருவர், மற்ற சீஷர்களைச் சந்தித்தபோது இதைப் பற்றி அறிந்துகொள்கிறோம். "அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினோருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக்கண்டு, கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக் கேட்டு..." (லூக்கா 24: 33,34) இந்த தரிசனத்தை அப்போஸ்தலர் பவுல் உறுதிப்படுத்தினார். "அடக்கம்பண்ணப்பட்டு,

வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்." (1கொரிந்தியர் 15:4-5) எஜமானை மறுத்தலித்ததற்கு பேதுருவை ஆறுதல்படுத்த இயேசு பேதுருவுக்கு தனிப்பட்ட முறையில் தோன்றியிருக்கலாம் என்பதும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. பிறகு, எம்மாவுக்கு பயணம் செய்த சீஷர்கள், சாலையில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும்,இயேசுவை அவர்கள் எப்படி அடையாளம் கண்டு கொண்டார்கள் என்பதையும் சொல்ல ஆரம்பித்தார்கள். (லூக்கா 24:33-35) இப்போது சீஷர்கள் உயிர்த்த ஆண்டவரை மற்றவர்களின் கண்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் பார்க்காமல், தங்கள் சொந்த கண்களால் பார்க்க ஆரம்பித்தார்கள்.

**கூடியிருந்த சீஷர்கள்**

"இவைகளைக் குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று - உங்களுக்குச்சமாதானம் என்றார். அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். அவர் அவர்களை நோக்கி - நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள், உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? " (லூக்கா 24:36-38) இயேசு மீண்டும் அவர்களின் இருதயங்களை ஸ்திரப்படுத்தினார். அவர்கள் இன்னும் நம்புவதற்கு தயங்கினார்கள். இன்னும் சந்தேகங்கள் இருந்தது!.

இது இயேசுவின் ஐந்தாவது காட்சி, ஆனால் அது மற்றவற்றிலிருந்து வேறுப்பட்டது. "நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள், நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். " (லூக்கா24:39-40 ) யோவான் இந்த காட்சியை உறுதிப்படுத்தினார். "அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்." (யோவான் 20:20)

அவருடைய கைகளும் கால்களும் சிலுவையில் அறையப்பட்ட தழும்புகளைக் காட்டியது என்பதில் சந்தேகமில்லை. இது உண்மையிலேயே இயேசுதான் என்பதை அவர்கள் மனதில் உறுதிப்படுத்தியது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை சீஷர்கள் புரிந்துகொள்வது மிக முக்கிமாக இருந்தது. சகோதரர் ரசல் Reprint 5417இல் எழுதினார். "அவர் இரண்டு முறை மட்டுமே அவர்கள் பார்த்ததைப் போன்ற ஒரு வடிவத்தில் தோன்றினார், மேலும் அவர் சிலுவையில் அறையப்பட்டதற்கான அடையாளங்களைப் பெற்றிருந்தார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் கதவுகள் மூடப்பட்டிருந்தபோது தோன்றினார், பின்னர் கதவுகள் மூடப்பட்டிருக்கும்போதே மறைந்தார்."

இன்னும் சில சந்தேகங்கள் இருந்ததால், இயேசு தான் உண்மையில் வந்துவிட்டார் என்று அவர்களுக்கு உறுதியளிக்க மற்றொரு காரியத்தை செய்தார். "ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில், புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன் கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப்புசித்து...." (லூக்கா24:41-43)

சகோ. ரசல் அவருடைய Reprint 5578ல் எழுதும் போது - "நாற்பது நாட்களில் மாம்சத்தில் அவரின் வெளிப்பாடுகள், நீண்ட காலத்திற்கு முன்பு இயேசு தன்னை வெளிப்படுத்திய காரியங்களுடன் சரியாக ஒத்திருக்கிறது. அவற்றில் ஒன்று ஆபிரகாமிடம் தன்னை வெளிப்படுத்தியதாகும். அவர் ஆபிரகாமோடு புசித்து சம்பாஷித்தார்....அவர் ஆபிரகாமுக்குத் தோன்றியபோது ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார். அதேபோல அவர் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவருடைய அப்போஸ்தலர்களுக்குத் தோன்றியபோதும் அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார். "

சகோதரர் ரசல் இந்த அனுபவங்களின் மூலம் இயேசு என்ன செய்தார் என்பதை அவருடைய Reprint 5578 ல் சுருக்கமாக் கூறினார் -"அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு மனித வடிவங்களையும் ஆடைகளையும் அணிந்து ஆவியின் ஜீவியாக இருந்த இயேசு தன்னை வெளிப்படுத்தினார். யூதர்களுக்குப் பயந்து கதவுகள் மூடப்பட்டிருந்த போது, இந்த ஆவியின் ஜீவியாகிய இயேசு சீஷர்களின் கூட்டங்களுக்குள் வர முடிந்தது.அவர் அவர்களின் முன்னிலையில் ஒரு சரீரத்தையும்

ஆடையையும் உருவாக்கினார். சில கணங்களுக்குப் பிறகு அவர் அவர்களின் பார்வையில் இருந்து மறைந்தார், சரீரத்தையும் ஆடைகளையும் கலைத்தார், அதே நேரத்தில் அவர் ஆவியின் ஜீவியாக கண்ணுக்குத் தெரியாதவராக இருந்தார்.... அந்த நாற்பது நாட்கள் யூத சீஷர்களுக்கும், ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் இரண்டு பெரிய பாடங்களைக் கற்பிக்க மிகவும் அவசியமானவை - (1) அவர் இனி மரிக்கவில்லை அதாவது இனி மரணத்தில் இருப்பதில்லை,அவர் ஜீவனோடு இருக்கிறார். (2) இனி அவர் ஒரு மனிதன் அல்ல, அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவி. அதாவது இப்போது கர்த்தரே ஆவியானவர்." (2கொரிந்தியர் 3:17)

இது ஏன் மிகவும் அவசியமானது என்பதற்கான காரணத்தை சகோதரர் ரசல் பிறகு கூறுகிறார். "அவருடைய சீஷர்கள் அவருடைய உயிர்த்தெழுதலை உண்மையாகவே விசுவாசித்தால் மட்டுமே, அவர்களுக்கு முன் வைக்கப்பட்ட வேலைகளை அவர்களால் செய்யமுடியும். மேலும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைக் கூட அவர்களால் பெற முடியும். எனவே, தேவையான எந்த விதமான செயல் முறைவியக்கத்தையும் அவர் சீஷர்களுக்கு கொடுக்க ஆயத்தமாக இருந்தார்.

இயேசுவை விசுவாசித்து, தன்னுடைய பாவங்களுக்காக அவருடைய மரணத்தை பலியாக ஏற்றுக்கொண்டு, அவரை இரட்சகராகவும், அவர் மூலமாக தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்று, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, தேவனுடைய புத்திரர்களாக அவரோடு ஐக்கியத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது." (Reprint 5578)

இயேசு அந்த ஞாயிற்றுக்கிழமை தனது கடைசி காட்சியை பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்."அவர்களை நோக்கி - மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்." (லூக்கா 24:44)

எம்மா ஊருக்கு செல்லும் வழியில் அவர் குறிப்பிட்டது போல, நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளிலும் அவரைப் பற்றி எழுதப்பட்ட விஷயங்களை இயேசு சுட்டிக்காட்டினார். "அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்துஅவர்களை நோக்கி - எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது, அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். " (லூக்கா24:45-48) இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் பாவ மன்னிப்பைப் பெறுவதைப் பற்றி பிரசங்கிப்பதே இனி இவர்கள் பணியாக இருக்கும்.

## கடவுளின் சர்வவல்லமையால் அவர் எழுப்பப்பட்டார்

இயேசுவின் உயிர்த்தெழுதல் சீஷர்களுக்கு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது என்பதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வர வேண்டும் ? இயேசு இனி மரித்திருக்கவில்லை, மாறாக, கடவுளின் வல்லமையினால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். (1பேதுரு1:21) பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு கூறியது போல, "... அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள் ஆனால் தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்படடிருக்கக்கூடாதிருந்தது."(அப்போஸ்தலர் 2:23-24)

நம்முடைய கர்த்தர் மரணம் வரை உண்மையுள்ளவராக இருந்ததினால், கடவுளின் நீதி அவரை மரணத்தின் அதிகாரத்தில் வைத்திருக்க அனுமதிக்கவில்லை. இயேசு இனி ஒரு மனிதனாக அல்ல, உயிரைக் கொடுக்கும் ஆவியானார். (1கொரிந்தியர் 15:45)

"எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார்..." (எபேசியர் 1:20-21)

## தகுதியுள்ள ஆட்டுக்குட்டி

# கிறிஸ்துவில் உள்ள நன்மைகள்



*Tom Ruggirello*

"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்" (வெளிப்படுத்தல் 5:12)

நினைவுகூருதலைக் கடைப்பிடிப்பது என்பது நம் ஆண்டவர் நம்மிடம் கேட்டுக்கொண்ட சில அனுசரிப்புகளில் ஒன்றாகும். இருப்பினும், கீழ்ப்படிதலால் மட்டுமல்ல, தேவதூதர்கள் கூட மேற்கண்ட வாசகத்தின் வார்த்தைகளை உரக்கச் சொல்லும் அளவுக்கு ஒரு சிறப்பானவரைக் கௌரவிக்கும் பாக்கியத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம். அவருடைய அன்பான சுய தியாகத்தின் காரணமாக, நினைவுகூருதலின் அடையாளமாக ஒவ்வொரு வருடமும் அவரை முறைப்படி கௌரவிக்கும் பாக்கியத்தை நாம் பெற்றுள்ளோம். அவர் செய்த எல்லாவற்றிலும், அவர் சொன்ன எல்லாவற்றிலும் இயேசு ஒருபோதும் தன்னை சுட்டிக்காட்டவில்லை. அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் தந்தைக்கு மகிமை கொடுப்பதே அவரது நோக்கமாக இருந்தது. அவர் மிக பெரிய ஒரு பாரம்பரியத்தை விட்டுச் சென்றுள்ளார். அவர் ஒரு நாள் அனைத்து சிருஷ்டிப்புகளுக்கும் விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் முன் மாதிரியாக இருப்பார். அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய பணிவான ஊழியத்தை இவ்வாறு விவரிக்கிறார் -

"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலிப்பியர் 2:6-11) இயேசுவின் காரணமாக நாம் ஒருபோதும் எதிர்ப்பாக்க முடியாத மிகப் பெரிய நன்மைகளைப் பெற்றுள்ளோம் என்பதை உணர்ந்து கொள்வதற்கு, கடவுளின் திட்டத்தின் அறிவே நமக்கு உதவியாக உள்ளது.

### கடவுள் இப்போது அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு இருக்கிறார்

நம்முடைய பரலோக தகப்பன், உள்ள அனைத்தின் சிறந்த சிருஷ்டிப்பாளர். அவர் நட்சத்திரங்களை அவற்றின் பாதைகளில் அமைத்தார், பில்லியன் கணக்கான தேவதூதர்கள் இரவும் பகலும் அவருக்கு ஊழியம் செய்கிறார்கள். "உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்." (சங்கீதம் 8:3, 4)என்று தாவீது எழுதினார். அவரது சிருஷ்டிப்பின் வல்லமைகள், நல்ல தரத்திலும் சரியான குணலட்சணங்களிலும் பூரணப்படுத்தப்படுகின்றன. "தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தமும் விளங்குகிறது, உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது." என்று மீண்டும் சங்கீதக்காரர் எழுதுகிறார். (சங்கீதம் 48:10) வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவருடைய கைகளின் செயல்கள் உண்மை மற்றும் நன்மைக்கு அர்ப்பணிக்கப்பட்டவை. இது சிருஷ்டிப்பின் வல்லமைக்கு அப்பால் செல்கிறது. இது ஒரு தெய்வீக குணத்தின் அழகை வெளிப்படுத்துகிறது. அவர் இப்படிப்பட்டவராக இருப்பதற்கும், அவர் செய்ததற்கும் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பாவமுள்ள அபூரண நிலைகள் இருந்தபோதிலும், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் இப்போது அவருடன் தனிப்பட்ட உறவை வைத்திருக்க முடியும். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." (யோவான் 1:12)

கடவுள் ஆவிக்குரிய குமாரர்களையும், குமாரத்திகளையும் தத்தெடுக்கும் செயல்பாட்டில் இருக்கிறார். அவர் இப்போது நமது "அப்பா பிதாவே" என்று அழைக்கப்படுகிறார் என்ற எண்ணத்தை நாம் மனதில் போற்றவேண்டும். (ரோமர் 8:15) காலமாற்றம் இந்த மென்மையான உறவின் மீதான நம்முடைய மதிப்பீட்டை ஆழமாக்கும்.

## தேவனுடைய பரிசுத்த ஆவி



கடவுளின் புத்திரர்கள் என்பது சிறிய கோரிக்கை அல்ல. அது சர்வவல்லவரின் பிரசன்னத்தை நம் வாழ்வில் நேரடியாக கொண்டுவருகிறது. இயேசு இந்த பூமியை விட்டு வெளியேறும் போது, கடவுளுடைய ஆவி ஆறுதலாகவும், தேற்றறவாளனாகவும், அனுப்பப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அந்த தெய்வீக செல்வாக்கு வேதத்தின் போதனைகள் மூலமாகவும், தெய்வீக ஏற்பாடு மூலமாகவும், சகோதரர்களின் உதவி மூலமாகவும் பார்க்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புது சிருஷ்டியின் வளர்ச்சியை வளர்க்க உதவுகின்றது. அவர்கள் மேலும் "கிறிஸ்துவைப் போல" மாறுவதற்கு சாத்தியமாக்குகிறது. கடவுள் தனது அன்றாட நடவடிக்கைகளில், தம் குழந்தைகளை மிகவும் நேசிக்கும் ஒரு தந்தையின் மென்மையை வெளிப்படுத்துகிறார். இயேசுவின் ஒப்புவாக்குதலின் வேலை இந்த உறவை சாத்தியமாக்கியிருக்கிறது, அதற்காக அவரைப் போற்றுவோம்!

## நம்முடைய விலைமதிப்பற்ற நன்மைகள்

● கடவுளை அணுகுவது மட்டுமல்லாமல், அவர் நம்மை அணுகக்கூடியவராகவும் நம்முடைய ஆண்டவர் இயேசு வழி வகுத்துள்ளார். நம் வாழ்வில் இயேசு சம்பந்தப்பட்ட பல காரியங்கள் உண்டு.

● அவர் நமக்கு நீதிமானாக்கப்பட்ட நிலைமையை வழங்குகிறார். (ரோமர் 5:1, 9)

● நம்முடைய முடிவுகளை வழிநடத்தும், அவரே நம்முடைய தலையானவர். (எபேசியர் 4:15)

● அவர் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார், நாம் பின்பற்றுவதற்கு ஒரு தரத்தை அமைத்துள்ளார். (யோவான் 13:15)

● நெருக்கமான பாதையில் போராட்டங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய இரக்கமுள்ள பிரதான ஆசாரியர் அவர். (எபிரெயர் 4:15)

● சத்தியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த நம்முடைய மாபெரும் அப்போஸ்தலரும் போதகருமாக இருக்கிறார். அவர் பரிசுத்தமான போதனைகளை உபதேசித்து, கடவுளையும் அவருடைய திட்டத்தைப் பற்றிய புதிய நுண்ணறிவுகளுக்கு நம் மனதைத் திறப்பவர். (எபிரெயர் 3:1)

● அவர் நம்முடைய மேய்ப்பராக இருக்கிறார், அவர் நம்முடைய அன்றாடத் தேவைகளைக் கவனித்து, நம் காயங்களைக் கட்டுகிறார், வேட்டைக்காரர்களிடமிருந்து நம்மைப் பாதுக்காக்கிறார். (யோவான் 10:14)

● அவரே நம் மணவாளன். அவர் நம்மை நேசிக்கிறார், நம்முடன் ஒன்றாக இருக்க விரும்புகிறார், அவர் தனது மணவாட்டியுடன் உலகத்தில் குழந்தைகளை உருவாக்க விரும்புகிறார். (மத்தேயு 25:1-10)

● அவர் நம்முடைய நண்பராக இருக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு



ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13)

இந்த ஆவிக்குரிய நன்மைகள் நம் வாழ்க்கையில் நடைமுறைச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆனால் அவர்கள் வேலை செய்வதற்கு, படிப்பு, தெய்வீகக் கொள்கைகளின் நடைமுறைப் பயன்பாடு மற்றும் வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றிய தியானம் ஆகியவற்றின் மூலம் அவற்றைப் பற்றி அதிகமாக அறிந்துக்கொள்வதில் நம் பங்கைச் செய்ய வேண்டும். நாம் வளரும் போது, நம்முடைய ஆண்டவரின் தொடர்பு இன்னும் அதிகமாகக் கவனிக்கப்படும்.

## தேவனுடைய பரிசுத்த ஆவி

கடவுளின் புத்திரர்கள் என்பது சிறிய கோரிக்கை அல்ல. அது சர்வவல்லவரின் பிரசன்னத்தை நம் வாழ்வில் நேரடியாக கொண்டுவருகிறது. இயேசு இந்த பூமியை விட்டு வெளியேறும்போது, கடவுளுடைய ஆவி ஆறுதலாகவும், தேற்றறவாளனாகவும், அனுப்பப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அந்த தெய்வீக செல்வாக்கு வேதத்தின் போதனைகள் மூலமாகவும், தெய்வீக ஏற்பாடு மூலமாகவும், சகோதரர்களின் உதவி மூலமாகவும் பார்க்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புது சிருஷ்டியின் வளர்ச்சியை வளர்க்க உதவுகின்றது. அவர்கள் மேலும் "கிறிஸ்துவைப் போல" மாறுவதற்கு சாத்தியமாக்குகிறது. கடவுள் தனது அன்றாட நடவடிக்கைகளில், தம் குழந்தைகளை மிகவும் நேசிக்கும் ஒரு தந்தையின் மென்மையை வெளிப்படுத்துகிறார். இயேசுவின் ஒப்புவாக்குதலின் வேலை இந்த உறவை சாத்தியமாக்கியிருக்கிறது, அதற்காக அவரைப் போற்றுவோம்!

## நம்முடைய விலைமதிப்பற்ற நன்மைகள்

● கடவுளை அணுகுவது மட்டுமல்லாமல், அவர் நம்மை அணுகக்கூடியவராகவும் நம்முடைய ஆண்டவர் இயேசு வழி வகுத்துள்ளார். நம் வாழ்வில் இயேசு சம்பந்தப்பட்ட பல காரியங்கள் உண்டு.

● அவர் நமக்கு நீதிமானாக்கப்பட்ட நிலைமையை வழங்குகிறார். (ரோமர் 5:1, 9)

● நம்முடைய முடிவுகளை வழிநடத்தும், அவரே நம்முடைய தலையானவர். (எபேசியர் 4:15)

● அவர் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார், நாம் பின்பற்றுவதற்கு ஒரு தரத்தை அமைத்துள்ளார். (யோவான் 13:15)

● நெருக்கமான பாதையில் போராட்டங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய இரக்கமுள்ள பிரதான ஆசாரியர் அவர். (எபிரெயர் 4:15)

● சத்தியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த நம்முடைய மாபெரும் அப்போஸ்தலரும் போதகருமாக இருக்கிறார். அவர் பரிசுத்தமான போதனைகளை உபதேசித்து, கடவுளையும் அவருடைய திட்டத்தைப் பற்றிய புதிய நுண்ணறிவுகளுக்கு நம் மனதைத் திறப்பவர். (எபிரெயர் 3:1)

● அவர் நம்முடைய மேய்ப்பராக இருக்கிறார், அவர் நம்முடைய அன்றாடத் தேவைகளைக் கவனித்து, நம் காயங்களைக் கட்டுகிறார், வேட்டைக்காரர்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்கிறார். (யோவான் 10:14)

● அவரே நம் மணவாளன், அவர் நம்மை நேசிக்கிறார், நம்முடன் ஒன்றாக இருக்க விரும்புகிறார், அவர் தனது மணவாட்டியுடன் உலகத்தில் குழந்தைகளை உருவாக்க விரும்புகிறார். (மத்தேயு 25:1-10)

● அவர் நம்முடைய நண்பராக இருக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13)

இந்த ஆவிக்குரிய நன்மைகள் நம் வாழ்க்கையில் நடைமுறைச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆனால் அவர்கள் வேலை



செய்வதற்கு, படிப்பு, தெய்வீகக் கொள்கைகளின் நடைமுறைப் பயன்பாடு மற்றும் வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றிய தியானம் ஆகியவற்றின் மூலம் அவற்றைப் பற்றி அதிகமாக அறிந்துக்கொள்வதில் நம் பங்கைச் செய்ய வேண்டும். நாம் வளரும் போது, நம்முடைய ஆண்டவரின் தொடர்பு இன்னும் அதிகமாகக் கவனிக்கப்படும்.

## வாழ்க்கையின் நம்பிக்கை

வாழ்க்கை விலைமதிப்பற்றது. நம்முடைய பல சோதனைகளை சமநிலைப்படுத்தும் ஒரு அற்புதமான நன்மை நம் ஆண்டவர் அளித்த நம்பிக்கையே. அப்போஸ்தலர் இவ்வாறு எழுதினார் - "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின்உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல,

### தேவனுடைய பரிசுத்த ஆவி

கடவுளின் புத்திரர்கள் என்பது சிறிய கோரிக்கை அல்ல. அது சர்வவல்லவரின் பிரசன்னத்தை நம் வாழ்வில் நேரடியாக கொண்டுவருகிறது. இயேசு இந்த பூமியை விட்டு வெளியேறும்போது, கடவுளுடைய ஆவி ஆறுதலாகவும், தேற்றரவாளனாகவும், அனுப்பப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அந்த தெய்வீக செல்வாக்கு வேதத்தின் போதனைகள் மூலமாகவும், தெய்வீக ஏற்பாடு மூலமாகவும், சகோதரர்களின் உதவி மூலமாகவும் பார்க்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புது சிருஷ்டியின் வளர்ச்சியை வளர்க்க உதவுகின்றது. அவர்கள் மேலும் "கிறிஸ்துவைப் போல" மாறுவதற்கு சாத்தியமாக்குகிறது. கடவுள் தனது அன்றாட நடவடிக்கைகளில், தம் குழந்தைகளை மிகவும் நேசிக்கும் ஒரு தந்தையின் மென்மையை வெளிப்படுத்துகிறார். இயேசுவின் ஒப்புவாக்குதலின் வேலை இந்த உறவை சாத்தியமாக்கியிருக்கிறது, அதற்காக அவரைப் போற்றுவோம்!

### நம்முடைய விலைமதிப்பற்ற நன்மைகள்

● கடவுளை அணுகுவது மட்டுமல்லாமல், அவர் நம்மை அணுகக்கூடியவராகவும் நம்முடைய ஆண்டவர் இயேசு வழி வகுத்துள்ளார். நம் வாழ்வில் இயேசு சம்பந்தப்பட்ட பல காரியங்கள் உண்டு.

● அவர் நமக்கு நீதிமானாக்கப்பட்ட நிலைமையை வழங்குகிறார். (ரோமர் 5:1, 9)

● நம்முடைய முடிவுகளை வழிநடத்தும், அவரே நம்முடைய தலையானவர். (எபேசியர் 4:15)

● அவர் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார், நாம் பின்பற்றுவதற்கு ஒரு தரத்தை அமைத்துள்ளார். (யோவான் 13:15)

● நெருக்கமான பாதையில் போராட்டங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய இரக்கமுள்ள பிரதான ஆசாரியர் அவர். (எபிரெயர் 4:15)

● சத்தியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த நம்முடைய மாபெரும் அப்போஸ்தலரும் போதகருமாக இருக்கிறார். அவர் பரிசுத்தமான போதனைகளை உபதேசித்து, கடவுளையும் அவருடைய திட்டத்தைப் பற்றிய புதிய நுண்ணறிவுகளுக்கு நம் மனதைத் திறப்பவர். (எபிரெயர் 3:1)

● அவர் நம்முடைய மேய்ப்பராக இருக்கிறார், அவர் நம்முடைய அன்றாடத் தேவைகளைக் கவனித்து, நம் காயங்களைக் கட்டுகிறார், வேட்டைக்காரர்களிடமிருந்து நம்மைப் பாதுக்காக்கிறார். (யோவான் 10:14)

● அவரே நம் மணவாளன், அவர் நம்மை நேசிக்கிறார், நம்முடன் ஒன்றாக இருக்க விரும்புகிறார், அவர் தனது மணவாட்டியுடன் உலகத்தில் குழந்தைகளை உருவாக்க விரும்புகிறார். (மத்தேயு 25:1-10)

● அவர் நம்முடைய நண்பராக இருக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13)

இந்த ஆவிக்குரிய நன்மைகள் நம் வாழ்க்கையில் நடைமுறைச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆனால் அவர்கள் வேலை செய்வதற்கு, படிப்பு, தெய்வீகக் கொள்கைகளின் நடைமுறைப் பயன்பாடு மற்றும் வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றிய தியானம் ஆகியவற்றின் மூலம் அவற்றைப் பற்றி அதிகமாக அறிந்துக்கொள்வதில் நம் பங்கைச் செய்ய வேண்டும். நாம் வளரும் போது, நம்முடைய ஆண்டவரின் தொடர்பு இன்னும் அதிகமாகக் கவனிக்கப்படும்.

### வாழ்க்கையின் நம்பிக்கை

வாழ்க்கை விலைமதிப்பற்றது. நம்முடைய பல சோதனைகளை சமநிலைப்படுத்தும் ஒரு அற்புதமான நன்மை நம் ஆண்டவர் அளித்த நம்பிக்கையே. அப்போஸ்தலர் இவ்வாறு எழுதினார் - "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின்உயிர்ததெழுதலும் உண்டாயிற்று, ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரிந்தியர் 15:19-22) இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டபோது, அவர் முதற்பலனாக ஆனார். அவரை பின்பற்றும் மற்றவர்களுக்கு அவர் உத்தரவாதம் அளித்தார். இயேசு உயிர்த்தெழுந்ததைப் போலவே நம்முடைய மரணத்திலிருந்து உயிர்த்தெழுவோம் என்பது உறுதியானது என்பதே இதன் பொருள். அவருடைய உயிர்த்தெழுதலை நாம் நம்பினால், நாம் மரணத்திலிருந்து எழுப்பப்படுவோம் என்று உறுதியாக நம்ப வேண்டும்.

நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை நம்முடைய விஷயங்களை மாற்றுகிறது. இந்த வாழ்க்கையின் கஷ்டங்களைத் தாங்குவதற்கும், அவற்றை சுமப்பதற்கும் மட்டுமல்லாமல், அவற்றில் மகிழ்ச்சியடைவதற்கும்

தனிச்சுற்றுக்கு மட்டும்

**மேலும் தகவல் மற்றும் புத்தக தேவைகளுக்கு தொடர்பு :**



# A Parable

## ஒரு உவமை

ஏப்ரல் சூரியன் எழுந்து பார்க்கிறது
பூமியும் எத்துணை அழகானது என்று
அந்த மலைகளின் வெப்பத்தை முத்திட்டு
ஏப்ரல் சிந்திய கண்ணீரை உலர்த்தியது;.
மற்றும் பனிக்கட்டி சங்கிலிகளால் பிணைத்துள்ளன
வளையங்களை உடைத்து அதனை விடுவித்தது !.

மூடுபனி, நீர், பனி இவை மூன்றும் ஒன்றே
மறைந்து செல்லும் ஏப்ரல் சூரியனின் கீழே

அவ்வாறே நீதியின் சூரியன் புவியைப் பார்த்து
மனிதர்களை ஆசீர்வதிக்க எழுந்துள்ளது

வீண் மூட நம்பிக்கை எனும் மூடுபனிகள்
உலர்த்தப்படுகின்றன
பாவம் மற்றும் பயத்தின் வெள்ளம்
முறியடிக்கப்படுகிறது
மற்றும் உலகம், அதனுடன் பிடிவாதமான
பெருமையால்
இனி எவரையும் ஒடுக்க முடியாது

உலகம், பாவம், பயங்கரம், இவை மூன்றும்
ஒன்றே
கறைந்து செல்லும் சத்தியத்தின் சூரியனின்
கீழே